ஜனவரி '88

மாதமிருமுறை

கலர் சினிமா

விலை ரூ. 2·50

புரட்சித் தலைவர் சிறப்பிதழ்

MGR – IS A LIVING GOD, INCORNATION OF GOD, WHICH GOD, WE DO NOT KNOW!

சந்திரனுக்கு நட்சத்திர அஞ்சலி!

சிவாஜி

என்னத்தே சொல்லுவே! எப்படி சொல்லுவே! ஒண்ணாவே சாப்பிடுவோம்! ஒண்ணாவே படுப்போம்! ஒண்ணாவே வாழ்ந்தமே! பாழாப் போன அரசியல் வந்து; எங்களே இரு துருவமாகப் பிரிச்சிடிச்சே!

எனது மரியாதைக்கும், பாசத்திற்குமுரிய அண்ணன், கலைத்துறையின் மூலம் தமிழக மக்களின் அரசியலில் நீங்காத இடம் பெற்று விட்டார். இது சரித்திரமே காணாத ஒன்று.

ஆலமரம் போல இருந்தாரே எங்களுக்கு. ஆதரவையெல்லாம் அளித்தாரே! இப்போது இல்லையே! இல்லையே!! எங்களே அனாதையாக்கிட்டுப் போயிட்டாரே! வாழ்க்கையே இருள் சூழ்ந்த மாதிரியாயிடிச்சேப்பா!

தனிப்பட்ட முறையில் என் சகோதரனை இழந்து, தனிமரமாய் நின்றபோது, எனது அண்ணனாக இருந்து என் குடும்பத் தலைவனாக இருந்தவரை இழந்து தவிக்கிறேனே எனக்கு யார் ஆதரவு! யார் ஆதரவு?



நிழல்கள் ரவி

உதவி என்று வந்தவர்களுக்கு எல்லாம் இல்லை என்று சொல்லாமல் வாரிக் கொடுத்து, சிவந்த கரத்துக்குச் சொந்தக்காரரர்.

அவர் இப்போது இல்லையே என்று நினைக்கும்போது என்னால் தாங்க முடியவில்லை, அவர் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கிறேன்.

மோகன்

எந்த பிராப்ளமாக இருந்தாலும் சந்தோசமா இருந்தாலும் அவர் கிட்டப் போய்த்தான் பங்கு போட்டுக் கொள்வோம். இனி யார் கிட்டே, எங்கே போய் சொல்றதுன்னு தெரியல்ல, அவர் ஆத்மா சாந்தி அடைய உங்களோடு சேர்ந்து நானும் பிரார்த்திக்கிறேன்.

பாரதி ராஜா பரதவிப்பு

காலத்தால் அழியாத கலைத் தாயின் தலலமகன் புரட்சித் தலைவர். தமிழ் நாட்டில் அவர் தாஜ்மகாலாக விளங்கி கலையுலகுக்கு அழகூட்டிக் கொண்டிருந்தார். கடைசியாய் அவர் கண்கள் பார்த்ததும், அவரது செவிகள் கேட்டதும் என் படமான 'வேதம் புதிது' தான் என் பதில் எனக்குக் கண்ணீர் கலந்த கௌரவம் கிடைத்தது.

புரட்சித் தலைவர் சாதி பேதங்களுக்கு எதிராய் போர்க் கொடி தூக்கியவர்! அவர் கருத்துக்களுக்குக் கலை வடிவம் தந்து படமெடுப்பதே என் நன்றிக் கடன்' என்று கண்ணீரோடு பரதவித்தார் டைரக்டர் பாரதிராஜா!

அஞ்சலிதேவி

எம்.ஜி.ஆரைப் பற்றி நான் எனன சொல்ல...? இனி நமக்கு மக்கள் திலகம் இல்லை, இந்த உலகமே இருட்டில் இருக்கிறது.

அவருடன் நான் எத்தனையோ படங்களில் நடித்திருக்கிறேன். முதல் படம் மர்மயோகி, சர்வாதிகாரி, சக்கரவர்த்தி திருமகன், மன்னாதி மன்னன் இன்னும் எத்தனையோ இருக்கு.

நான் கடைசியாக அவருடன் நடித்த படம் உரிமைக் குரல்!

ஒரு முறை அவர் நடிகர் சங்கத்துக்கு என்னைத் தலைவராக்கினார். செட்ல ஓர்க் பண்ணிக்கிட்டு இருக்கும் போது 'அம்மா நீங்க இந்த வருசம் நடிகர் சங்கத்துக்கு தலைவராகணும்' என்று சொன்னார்.

'நான் என்ன செய்ய முடியும்? எனக்கு ஒண்ணும் தெரியாது. வேண்டாம் என்றேன்.

ஆனால் அவரே என்னை நடிகர் சங்கத்துக்கு 'பிரசிடெண்ட்' ஆக்கினார்.

அப்போது எப்படி இருந்தாரோ அப்படித்தான் எப்போதும் இருந்தார். இந்த நடிகர் உலகமே... இனிமே... அவரைப் போன்ற ஒரு கலைஞரைப் பார்க்க முடியாது.



கங்கை அமரன்

யாருக்கும், யாராலும் ஆறுதல் சொல்ல முடியாத துக்கம் இது. எம்.ஜி.ஆர். மரணமடையவில்லை, அவர் என்றும் சாக மாட்டார்; உயிருடன் தான் இருப்பார் என்று என்னைப் போல் நம்பிய பாமர மக்கள் லட்சக்கணக்கில் உண்டு

அதைப் பொய்யாக்குகிற வகையில் அவர் இன்றுஇல்லை. எஸ்.எஸ்.பி. லிங்கம் அவர்களுடைய மருமகன் நான் என்பதால் என்னை அவர் (எம்.ஜி.ஆர்) மருமகனே என்று தான் கூப்பிடுவார்.

அதனால் அமைச்சர்களும் அவர் கட்சியிலுள்ள மற்ற தலைவர்களும் என்னை மாப்பிள்ளே' என்றே கூப்பிடுவார் வார்கள்.

எங்கள் குடும்ப நிகழ்ச்சிகள் எல்லாவற்றிலும் பங்கு பெற்றிருக்கிறார். சமீபத்தில் எனது மகன் மிருதங்க அரங்கேற்றத்தில் கலந்து கொண்டு இரண்டரை மணி நேரம் இருந்து பரிசு தந்து பாராட்டினார்.

என் குடும்ப நிகழ்ச்சிகளுக்கு மட்டுமல்ல, எல்லா குடும்பங்களிலும் நடக்கிற நிகழ்ச்சிகளுக்கு எல்லாம் செல்வார்.

அவர் மறைய வில்லை. நம்மோடு இருக்கிறார். நம்மை கவனித்துக் கொண்டிருக்கிறார்.

அவர் காட்டிய வழியில் நடப்பது தான் நாம் அவருக்கு செய்யும் நன்றி!



பாக்கியராஜ்

ஒரு தகப்பனை இழந்த குழந்தைகள் நம் எதிர்காலம் இருள் தானா என்று பயப்படும்.

புரட்சித் தலைவர் அவர்கள் ஒரு தகப்பனது பொறுப்பிலிருந்து கலையுலகக் குழந்தைகளுக்கு ஆதரவையும் அன்பையும், ஆளாக்கும் பொறுப்பையும் கொண்டு வாழ்ந்தார்.

அண்ணன் தம்பி, அக்காள், தங்கைகளை இழந்து விட்டாலும் அதே அளவு அன்பை பாசத்தை அவர்களிடம் காட்டி ஆறுதலடையச் செய்யலாம்.

ஆனால், தாயைப் பிரிந்த குழந்தைகளை எதை வைத்து ஆறுதலளிப்பது? சமாதானப் படுத்துவது?

தீராத் துயரை அல்லவா தாயின் பிரிவு குழந்தைகளுக்கு உண்டாக்கும்? அந்த கவலை, ஆக்கம், ஆறாத ஒரு நிரந்தர வடுவாகவே அமையுமே தவிர - மாறாது - ஆறாது!

புரட்சித் தலைவர் தாயைப் போல நமக்கு தீராத் துயரை உருவாக்கிவிட்டுப் போய்விட்டாரே! அத்தகைய ஒரு உன்னதத் தலைவன் என்று அவரைக் கூறுவது, அவரது தாயன்பைக் குறைத்துக் கூறுவதைப் போலவேயாகும்.

ஏனென்றால் எந்தத் தலைவனுக்கு பின்னாலும் வேறொரு தலைவன் வரலாம்! வர முடியும். ஆனால் புரட்சித் தலைவர் உள்ளத்தை அவர்களிடம் எதிர்பார்க்க முடியுமா? முடியாது.

புரட்சித் தலைவர் ஆணாகப் பிறந்ததால் 'தலைவரே' என்று குரல் கொடுத்தோம். இல்லையென்றால் 'தாயே' என்று தான் கூக்குரல் கொடுத்திருப்போம்.

எதை வென்றாலும் சாவை வெல்ல முடியாதவன் தான் மனிதன். ஆனால் அதையும் வென்று காட்டியவர் நமது தலைவர். சாவு தானாக அவரைத் தேடிவந்த போதெல்லாம், அதை அவமானப் படுத்தித் திருப்பி அனுப்பி விட்டார். இப்போது அவருக்கேற்பட்ட சாவு, அவர் தானாக விரும்பித் தான் அழைத்துக்கொண்டார். அதுகூட உடலை மட்டுமே எடுக்கும் உரிமையைத்தானே கொடுத்தனுப்பி விட்டார்! உயிரை மட்டும் தமிழ் மக்களுக்காக அல்லவா பிரித்துக் கொடுத்து விட்டார்.

இதுவரை வெறும் தொண்டர்களாக இருந்த எங்களை, இப்போது ஒவ்வொருவரும் ஒவ்வொரு எம்.ஜி.ஆராக எங்கள் உள்ளத்திலே ஊடுருவி விட்டார் என்றல்லவா எண்ணிப் பெருமைப்படுகிறோம்.

புரட்சித் தலைவர் நமது ரத்தத்தின் ரத்தமாகி விட்டார்! இது பெருமையான குரல் மட்டுமல்ல! பொறுப்பான சத்தியப் பிரமாணம். உலகம் உள்ளளவும் புகழ்பாடி 'தலைவ'ரை உயிர்ப்பித்துக் கொண்டே இருப்போம்.

ராஜேஷ்

நான் சமீபத்தில் என்னுடைய பிறந்த நாளின்போது ராமாவரம் தோட்டத்துக்கு சென்றிருந்தேன். அரை மணி நேரம் பேசிக்கொண்டிருந்தேன். நான் கொடுத்த 'சாக்லட்'டை வாங்கிச் சாப்பிட்டார்.

அவரைப் பார்த்த எனக்கு அழுகை வந்தது. நான் அழுது



விட்டேன். "கவலைப்படாதே நான் நன்றாகத்தான் இருக்கிறேன்" என்றார்.

கடந்த 5 ஆண்டுகளாகத் தான் எனக்கு அவர் நல்ல பழக்கம். என் ஆயுளில் என் வீட்டுக்கு ஒருமுறை எம்.ஜி. ஆரைக் கூட்டிக்கொண்டு வர வேண்டும் என்று விரும்பினேன்.

கடந்த ஜனவரி மாதம் வந்து எனது வீட்டு கிரஹப் பிரவேசத்தில் கலந்து கிட்டார்.

கடந்த (டிசம்பர்) 9-ம் தேதி என் தங்கச்சி கல்யாணம். நான் அவரைக் கூப்பிடக்கூட வில்லை, கிரகப் பிரவேசத்துக்குத்தான் வந்தாரே, மறுபடியும் கூப்பிட்டு சிரமப்படுத்த

(15-ம் பக்கம் பார்க்க)

ஏற்றமிகு எம் தலைவா இன்னொரு முறை பிறப்பாயா?

உலகம் ஏன் இன்று வரை அழியாமல் இருக்கின்றது என்பது, ஒரு கேள்விக் குறியே!

எரிமலை வெடிக்கின்றது ஒரு பகுதியில்! நெருப்புப் பிழம்புகளைக் குவிக்கின்றது!

குவிக்கப்பட்ட அக்கினிச் சாம்பல்கள் எல்லாம், கால வட்டத்தில் இறுகி, மலைகளாகக் குன்றுகளாகக் காணப்படுகின்றன!

சுயமரியாதை உணர்வுகளால் உருவாக்கப்பட்ட மனிதனைப் போலத் தலை நிமிர்ந்து, தன்மான முகடுகளாகத் திகழ்கின்றது!

கடல் கொந்தளிப்பு, எல்லை மீறிய கோபாவேச அலைகளை எழுப்பி, பூமியின் சில பகுதிகளை விழுங்கி ஏப்பமிட்டுள்ளது!

கடல் விழுங்கிய கபாடபுரம். கவின் புகார், தென் மதுரை. லெமூரியா நில நாடுகள் எல்லாமே, கடல் விழுங்கும் உணவென்றே போய் விட்டன!

கடல் கொந்தளிப்பு, ஒரு பகுதி நிலங்களைக் கபளீகரம் செய்தாலும், மறு பகுதியில் இமயம், விந்தியம், மேற்கு கிழக்குத் தொடர்ச்சி மலைகளைப் போல் நிலக் கொப்புளங்களை நிலை நிறுத்திக் காட்டியிருக்கின்றது!

பூகம்பங்கள், வேறு சில பகுதிகளில் பூமியைப் பிளந்து உருகுலையாமல், புதைத்துக் கொள்கின்றது!

அதன் அடையாளமாக, காலத்தின் நீண்ட ஆயுளில், அவை நிலக்கரி, இரும்பு, தங்கம், பெட்ரோல் ஊற்றுக் கண்களாக, மாறிய மாற்றுருவத்தோடு, மக்கட்குப் பயன்படுகின்றன!

சூறாவளி, புயல் போன்ற பேய்க் காற்றுகளால் உலகம் நிலை குலைந்தபோதும் கூட, இறுதியில் அவை ஓர் அமைதியை நாட்டி விட்டே செல்கின்றன!

இயற்கையின் கோரங்கள் இவ்வாறெலாம் இயங்கினாலும், இந்த உலகம் ஏன் இன்னும் அழியாமல் இருக்கின்றது?

உலக இலக்கியங்கள் விஞ்ஞான ஆய்வுகள், தத்துவச் சிந்தனைகள், ஞானியரின் போதனைகளின் அறிவுகளில் ஆயும்போது சரியான விடை காணப்பட வில்லையே!

தமிழகத்தில் வாழ்க்கைச் சட்டமான திருக்குறள் ஒன்றுதான், அதற்கான சரியான, அறிவொப்பமான, சிந்திப்பதற்கான பதிலைக் கூறுகின்றது.

''நெருநல் உளனொருவன் இன்றில்லை
எனினும்
பெருமை யுடைத்திவ் வுலகு''

என்ற திருக்குறளை விடையாகப் புகன்று, உலகம் அழியாமல் இருப்பதற்குரிய காரண, காரியங்களைக் கழறுகிறது!

''நேற்று இருந்தவன் இன்று இல்லை என்றாலும், அவனால் இவ்வுலகம் பெருமை பெறுகிறது'' என்கிறார் திருவள்ளுவப் பெருமான்;

அறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர்களைப் போன்ற உலக மனித தெய்வங்கள் தோன்றுகின்றார்கள்.

அவர்கள் நாட்டுக்கும், மக்களுக்கும் ஆற்றியுள்ள சீரிய சிறப்பான பணிகளால், அவர்களுக்குரிய பெரும் புகழ், அழியாப் புகழ், அவர்களைத் தேடி வருகின்கிறதல்லவா?

அந்த வரலாற்று நாயகர்கள் புகழைத் தாங்கி நிற்க வேண்டுமே! யார் சுமப்பார்கள் அதை.

மக்களால் தாங்க முடியுமா? அவர்கள்தான் சாவுக்கு இறையாகி, மீண்டும் மண்ணாகின்றவர்களாயிற்றே !

பிறகு யார் சுமப்பது அந்த மேதைகளின் இயற்கைப் புகழை? பெருமையை! தொண்டுகளின் துவளா கீர்த்தியை!

அந்தப் புகழைத் தாங்கக் கூடிய ஒரே வலிமை பெற்றது, அவர்கள் பிறந்த இந்த மண்தானே! உலகம் அல்லவா?

பூமி. அந்த புகழ்க் கொடிகளை, அநுபவச் சுவடுகளை, அறிவுச் செல்வங்களை; இந்த உலகம் சுமந்தால் தானே, எதிர்கால மக்கட்கு அவை பாடமாக நிலவ முடியும்?

அதற்காகத்தான், இயற்கையின் கோர விளையாட்டுகளால் இந்த பூமி வேதனைகளை அனுபவித்தாலும்கூட இன்று வரை அது அழியாமல் இருக்கின்றது என்கிறார் வள்ளுவப் பெருமான்!

அந்த காரணத்தின் காரியமாகத்தான், இந்த உலகம் இயங்கிக் கொண்டு, இன்று வரை, அழியாமல் நிலைத்து நின்று புகழ் நடை போட்டு, வாழ்ந்து கொண்டிருக்கின்றது.

மேதைகளின் செயல்கரிய செயல்களால் குவியும் பெருமைகளைத் தாங்க வேண்டியது உலகத்தின் கடமை!

அந்தக் கடமையை அது ஆற்றுவதால்தான், அதற்கு அழிவே வராமல் உயிர் வாழ்கின்றது!

ஏனென்றால், 'ஒருவர் புகழை மற்றொருவன் தாங்க மாட்டான்! தாங்கிக் கொள்ளவும் மாட்டான்!

மண் ஒன்றுதான், தன்னை அகழ்வாரையும் தாங்கிக் கொள்வதைப் போல, மேதைகள் புகழையும் தாங்கிப் பெருமை பெறுகின்றது!

வாழ்வதற்காகச் சிலர் பிறக்கிறார்கள்! பிறந்ததற்காகப் பலர் வாழ்கிறார்கள்!

புகழ் சிலரைத் தேடிப்போய் புகலிடம் பெறுகின்றது! பலர் புகழைத் தேடிப் போய் பரிதாபம் பெறுகிறார்கள்!

பிறந்ததற்காக வாழ்ந்தவர்களைப் பற்றி உலகம் விக்கி விக்கி அழாது!

'பிறந்தன அழிய வேண்டியன' என்ற விதிக்குட்பட்ட மரம், செடி கொடி, பறவை, மிருகம் போன்ற வாழ்வு

'வேதம் புதிது' ஒரு குறிஞ்சிப் பூ!

குறிஞ்சிப் பூவைப் போலே எப்போதோ பூத்திருக்க வேண்டிய பூ, வேதம் புதிது!

தமிழக பட அதிபர்கள் சிந்தனையிலே அரும்பாத பூ வேதம் புதிது!

இயக்குநர் பாரதிராஜாவின் மன உணர்வில், காலம் கடந்தாகிலும் இந்த 'சமுதாயச் சிந்தனைப் பூ, பூத்ததே என்பதற்காகப் பாராட்டுகிறோம்! நன்றி!

பகுத்தறிவாளர் யார்யாரோ, அவர்களாலே, மாலையாகக் கட்டப்பட வேண்டிய மணம் கமழ் மலர்களிலே ஒன்று

வேதம் புதிது' என்ற சாதிப் பூ!

பூக்களிலே பல வகையுண்டு. பல நிறமுண்டு, பல மணமும் உண்டு!

எல்லா மலரும் ஓரே நிறமாக இருந்தால் பூக்களது பலவீனம் புலப்படும்!

மஞ்சள் நிறப் பூ, கண் நோயைக் குணப்படுத்தும்!

சிவப்பு நிறப் பூ, எப்போதும் மிரட்சியைச் சிந்தும்!

ஊதா நிறப் பூ, ஒன்றாலே தான் இந்த உலகம் வாழ்கிறது என்கிறார்கள் விஞ்ஞானிகள்!

வெள்ளை நிறப் பூ, பெண்களைக் கவரும் ஈர்ப்புச்சக்திப் பூ!

நிறத்திற்கு இருக்கின்ற நிரந்தரமான வரலாறு இவை!

இயக்குநர் பாரதிராஜாவின் 'வேதம் புதிது' என்ற வெள்ளைப் பூ, நல்லதொரு சாதிப் பூ!

இந்தப் பூவின் மணத்திற்கு விதை போன்ற ஒரு வரலாறே உண்டு!

அதனடிப்படையில் கருவாகி உருவான கதையே, 'வேதம் புதிது'!

தமிழ் வரலாறும், இலக்கிய உணர்வுகளும் உள்ளவர்களுக்கு, இந்த 'சாதிப் பூ'வின் உண்மை புரியும்.

'கபிலரகவல்'' என்ற பாடல்தான், 'வேதம் புதிது' என்பதற்குரிய கரு—உரு!

ஆதி என்ற புலைச்சிக்கும்

வாழ்ந்தவர்கள் அவர்கள்.

மண்ணில் தோன்றினார்கள்! தோன்றிய மண்ணோடு மண்ணானவர்கள்! இது 'வாழ்க்கை!

அடையாளம் தெரியாத அவமான வாழ்க்கை! அவ்வளவுதான்!

வாழ்வதற்காகப் பிறந்தவர்கள், தோன்றிற் புகழொடு தோன்றியவர்கள்.

வாழ்ந்த அடையாளங்களை அவர்கள் வையத்துக்கு வைத்து விட்டுப் போனவர்கள்.

அவர்கள் வாழ்க்கை மான வாழ்க்கை! குறள் வாழ்க்கை!

எவனொருவன் இந்த மண்ணிலே பிறந்து, இந்த வானத்தின் உயிர்க் காற்றை சுவாசித்து, மண்ணின் வளங்களை உண்டு, மண்ணின் ஊற்று நீரைப் பருகி, பிறந்த மண்ணிலேயே மண்ணாகின்றானோ, அவன் தான் பிறந்த நாட்டுக்கும்—மக்களுக்கும் வாழ அடையாளங்

இன்றைய முதலமைச்சர்
ஜானகி அம்மாள்.

களை நாட்டி விட்டுச் செல்லும் மனித தெய்வமாகின்றான்! அவ்வளவுதான் மனித குலத்தின் உயிர் வாழ்வு!

நிகழ்கால மனிதன் நிலையிலே நின்ற மனிதன், எதிர்கால தெய்வமாகின்றான்.

அவன்தான், 'காலம்' ஆனவன் என்ற பொருளுக்கே உரியவனாகின்றான்,

வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து காட்டிய அந்த அற்புதன், வானுறையும் தெய்வத்தில் வைக்கப்படுகின்றான்!

மற்றவரெலாம் மனிதரல்ல; மக்கட் பதடிகள்! கீழோர்! மக்களே போல்வர்!

மனிதனாகப் பிறந்து விட்ட கடுகுள்ளம், தொன்னையுள்ளம் கொண்டு. தன் பெண்டு தன் பிள்ளை, சுற்றமென வாழ்ந்து செத்தவர்கள்!

அஃறிணை வாழ்வு போல வாழ்ந்த பேதை! 'காலம்' ஆக மாட்டான்! செத்தான் என்ற பெயர் பெற்றவன்!

'காலம்' ஆகிவிட்ட அறிஞர் அண்ணா அவர்களுக்கும், செத்தவராகிவிட்ட கே. விநாயகம் அவர்கட்கும் தமிழக சட்டமன்றத்தில் வாக்குவாதம் ஏற்பட்டது 1967-ல்.

அண்ணா அவர்களது ஆட்சியைக் கடுமையாக விமர்சித்தார் விநாயகம், ''Your days are numberd'' என்றார்! அப்போது அவர் காங்கிரஸ்காரர்!

தி.மு.கழக ஆட்சியின் நாட்கள் எண்ணப்படுகின்றன' என்று, ஷேக்ஸ்பியரின் நாடக வரியால் வசைபாடினார்!

அறிவின் பிறப்பிடமான அண்ணா அவர்கள், அதற்குப் பதில் கூறும்போது, 'My steps are measured' என்றார்!

எனது அடிச்சுவடுகள் அளந்து வைக்கப்படுகின்றன' என்று அதே ஷேக்ஸ்பியரின் நாடக வரியில் நயமோடு அறைந்தார்!

அத்தகைய அண்ணா அவர்கள் அளந்து வைத்துப் பாதச்சுவடுகளின் பாதையிலே—பயணத்திலே—புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் அரசியல் பாதச் சுவடுகளும் பதிந்தன!

அதன் எதிரொலி என்ன தெரியுமா?

''கடவுள் ஒரு முறைதான் பேசுவார்! அதைக் கவனிப்பவனே தெய்வ பக்தன்'' என்றெண்ணி, அண்ணா பாதையிலே நடந்து, அரசியல் பயணத்தைத் தொடர்ந்தார்!

அமரராகிவிட்ட அண்ணாவின் அறபுதக் கருத்தோவியங்களைக் கழகத்திலே புகுத்த விரும்பினார்!

அண்ணாவின் கருத்துக்களுக்கு அர்த்தம் கூறுபவர் அனைவருமே அல்லர், என்பதை அகற்றி, புரட்சித் தலைவரே அதன் வாரிசு என்ற மன நிலையை, மக்களும் பெற்றார்கள்.

'கணக்கு எங்கே? கணக்கு எங்கே? என்று கொள்ளையர்களைக் கள்ளமின்றிக் கடாவினார்?

'கணக்கு' தெரியாதவர்கள் எல்லாம் கண் விழி பிதுங்கி கலாம் விளைவித்தனர்.

ஆத்திரப்பட்டவர்கள், தங்கள் நேத்திரத்தையே பிடுங்கி எறிவது போல, தூக்கி எறிந்தார்கள்-புரட்சித் தலைவரைக் கழகத்தை விட்டு!

வெளியே வந்தார்! பூமியைப் பார்த்தார்! பூ போன்ற கழகக் கண்மணிகளை மாலையாகக் கட்டி. அண்ணா திருவுருக்கு ஆரமாக்கினார்!

கழகத்திற்கு ஓட்டுப் போட்டு அரியாசனத்தில அமர்த்திய ஏழை — நடுத்தர நட்சத்திரக் கூட்டங்களைக் கண் சிமிட்டாமல் பார்த்தார்!

'ரத்தத்தின் ரத்தமே!' கழகக் கண்மணிகளே! என் வார்த்தைகளுக்கு காது கொடுங்கள்!

கழக அறிவாளிகளே, என் எண்ணங்கட்கு இதயத்தை வழங்குங்கள் என்று, எழுதினார் — பேசினார் — உழைத்தார்!

உண்ட உணவை 'நா' சுவை காணவில்லையா? அதனைப் போல புரட்சித் தலைவரின் வார்த்தைகளை மக்கள் சுவைத்தனர்! எண்ணினர்!

நியாயம், நன்மை. தீமை, அன்பு. பண்பு, நேர்மை, கண்ணியம், கட்டுப்பாடு, கடமைகளைக் கழகம் சிந்தித்தது!

நியாயப் பகைவர்களான அண்ணாவின் எண்ண விரோதிகள், நாட்டை ஆள்வதா?

புரட்சித் தலைவரும் இல்லத்தரசியும்!

'நீதிக்குத் தலை வணங்குபவரை'த் தூக்கி எறிவதா? குற்றவாளியாக்குவதா?

இத்தகைய சிந்தனையிலே பூத்த பூந்தோட்டமாக 17-10-1972 அன்று, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை அமைத்தனர் கழகக் கண்மணிகள்!

அற்புதமான வலலமையோடு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை வளர்த்தார் புரட்சித் தலைவர்!

தொடர்ச்சி - 7-ம் பக்கம்

பகவன் என்ற பிராமணனுக்கும் ஏழு பிள்ளைகள் பிறந்தார்கள்!

ஒவ்வொரு குழந்தையையும் எங்கெங்கு பெறுகிறார்களோ, அங்கங்கே விட்டுவிட்டுப் போவது அவர்கள் பழக்கம்!

திருவள்ளுவர், கபிலர், ஔவை, உப்பை, உறுவை, வள்ளி மற்றும் ஒருவருடன் சேர்ந்தவர்களே அந்த எழுவர்!

அவ்வாறு விடப்பட்டவர்களிலே ஒருவர்தான் கபிலர்!

இந்தக் கபிலர், சங்ககாலக் கவிஞரா? இடைக்காலக் கவிஞரா?

அந்த சர்ச்சைக்கு நாம் போகவில்லை! விமரிசனம் விரிவடையும் என்பதால்!

நாம் கூறுகின்ற கபிலர்' கபிலரகவல்' என்ற பாடலைப் பாடிய ஒரு புலவர்!

திருவாரூரிலே அவர் பிறந்தார்! பார்ப்பனர் ஒருவரால் வளர்க்கப்படுகிறார்!

வேதங்கள், சாஸ்திரங்கள் கறற் மிகச் சிறந்த ஆசார சீலர்!

தக்க வயது வந்ததும் பூணூல் அணிவது வேதியர் மரபு!

அதற்கேற்ப பூணூல் விழா ஏற்பாடாகியது!

திருவாரூர் வாழ் அந்தணர் எவரும் கபிலர் பூணூலணிவதை விரும்பவில்லை!

காரணம், அவர் பிறப்பால் பிராமணரல்லர்! யாரோ பெற்ற பிள்ளை!

அதனால், பிராமணர்கள் ஒன்று கூடி பூணூலணிவிக்க மறுக்கின்றனர்!

கபிலரை வளர்த்தவர் திருவாரூர் கோயில் அர்ச்சகர் ஒருவர்!

பிறப்பால் பேத முற்றவனுக்குப், பிராமணர் ஆசாரப்படி பூணூல் போடுவதை ஒப்ப முடியாது என்று ஆசார ஆரவாரமிடுகின்றனர்!

சாதிப் பிரச்னை சதிராடியது - பிறப்பு, கோத்திரங்கள் எல்லாம் போர்க் கொடி தூக்கின!

கபிலரை வளர்த்தவர்கள் பாசத்தால் ஆரூர் வேதியர்களைக் கெஞ்சினர்! கண்ணீர் விட்டபடியே மன்றாடினர்.

அவமானப்படுத்தப் பட்டார் கபிலர் தந்தையான அர்ச்சகர் - மற்ற வேதியர்களால்!

அப்போதுதான், கபிலருக்குத் 'தான் யார்?' ஏன் பூணூல் போட மறுப்பு சாதியாவது ஆசாரமாவது என்ற கேள்விகளே எழ ஆரம்பித்தன.

வளர்ப்புத் தந்தை பட்ட அவமானம்! ஆரூர் மறையவர் சாதிச் சண்டை, ஆசார ஆணவம், அனைத்தையும் கண்ணீர் விட்டபடியே பார்த்துக் கற்சிலையானார்!

எம்.ஜி.ஆர் இயேசுநாதரே...

புகைப்படக் கலைஞர் நாகராஜராவ்



தமிழக முதல்வர், ஆந்திர முதல்வருடன், ராவ்!

'நாம்' என்ற படத்திலே நடித்ததிலிருந்து எனக்கு எம். ஜி. ஆர். பழக்கம். அவருடைய இரண்டாவது மனைவிக்கு க்ஷயரோகம்! என் மனைவிக்கும் க்ஷயரோகம்! மருத்துவ மனையிலே எங்களுடைய மனைவிகளைப் பார்த்து சிகிச்சை செய்யும் போதெல்லாம் நாங்கள் சந்தித்தோம். அதிலிருந்து நெருக்கமாகப் பழகும் சான்ஸ் கிடைத்தது.

எம். ஜி. ஆரை யாராவது திட்டினாலும் அவர் சிரித்துக் கொண்டே கேட்பார்!

எம்.ஜி.ஆர்., என்,டி.ஆர்., சிவாஜி யாரானாலும் சரி, என்னை அழைத்தே படம் எடுக்கச் சொல்வார்கள்.

எம். ஜி. ஆரை வைத்து, தேவர் எடுத்த படங்களிலே எல்லாம் எம்.ஜி.ஆரை நான் தான் போட்டோ எடுப்பேன். எம். ஜி. ஆர். ஒரு டெரர்! அவரைப் படம் எடுக்க முடியாது. படம் எடுப்பவர்களுக்கு அவ்வளவு பயமாக இருக்கும்,

அவரை நான் படம் எடுக்கப் போகும்போது, 'அதா எடுத்திட்டியே' என்பார். அவ்வளவு விரைவாகப் படம் எடுத்து விடுவேன்.



என் மீது அவருக்கு அவ்வளவு இஷ்டம்! ஏன் அவருக்கு அவ்வளவு அன்பு ஏற்பட்டதென்று எனக்கே புரியவில்லை, அவர் அதிகம் கட்டுப்பாடு உடையவர். அவரிடத்திலிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டியன நிறைய இருக்கின்றன!

உலகத்திலேயே இப்படிப் பட்ட ஒருவர் இல்லையே!

எம். ஜி. ஆர். வாத்தியார்! பிரம்பில்லாத வாத்தியார்!

ஸ்டுடியோவிலே பல துறைகளிலே வேலை செய்யும் நாங்கள் கும்பலாகக் கூடிப் பேசிக் கொண்டிருப்போம். வாத்தியார் வரார்னா நாங்கள் எல்லாம் மூலைக்கொருவராகப் பறந்து போய் விடுவோம்! எல்லாம் பயம்தான்! அதனால் அவர் வாத்தியார்! வாத்தியாருக்கும் வாத்தியார்! பிரம்பில்லாத வாத்தியார்!

உதாரணமாகச் சொல்லுகிறேன். எம். ஜி. ஆர். ஸ்டுடியோவுக்குப் போன் பண்ணுவார்.

நாங்கள் கேட்கும் இடத்திலே கால்மேல் கால் போட்டுக் கொண்டே அவரோடு பேசலாம்! பேசுவதையும் கேட்கலாம்! அவருக்கு என்ன தெரியவாப் போகிறது? இருந்தாலும், அவர் நேரிலே இருந்து பேசுவதைப் போல எங்களுக்கு ஒரு பயம்! அதனாலே அவர் டெலிபோனில் பேசும் போது, நாங்கள் பயபக்தியோடே எங்களையும் அறியாமல் எழுந்து நின்றே பேசுவோம்! அவ்வளவு பயம் சார் எங்களுக்கு! அவர் பேசி முடித்ததற்கு அப்புறம்தான் எங்களுக்கு தெளிவே வரும். அது மாதிரி கிராக் பண்ணிட்டார் எங்க்ளை!

அவர் கடவுளால் உருவாக்கப் பட்டவர்! அவர் தென் இந்தியாவின் முதல்வர். அதனாலேதான், இந்தியா இலங்கை ஒப்பந்தத்தைப் பற்றிப் பேசவந்த நமது பிரதமர், எம். ஜி. ஆர். காலிலே விழுவதற்குப் பதிலாகத்தான், மைக்கை அட்ஜெஸ்ட் பண்ணிக் கொடுத்தார்.

எம். ஜி. ஆர். சம்பவங்கள் எல்லாமே மறக்க முடியாத சம்பவுங்கள் தான்! எதை மறப்பது என்று தெரியவில்லையே.

ரொம்ப பேர் அவரிடத்திலே வாங்கினதைச் சொல்றதில்லே! கொடுத்தவரும் சொல்றதில்லேயே!

ஒருமுறை நாங்கள் காரிலே போறச்சே, தெருவிலே ஒரு குழந்தை உட்கார்ந்திருந்தது. அதைப் பார்த்த எம்.ஜி.ஆர். குழந்தையைத் தூக்கிக் கொண்டு பேய், யார் குழந்தை என்று கேட்டு, அந்த வீட்டிலே விட்டுட்டு வந்தார்.

அப்படிப்பட்ட அவர் நல்லா இருக்கணும். ஒரு முறை என்னைக் கட்டிப் பிடித்து முத்தம் கொடுத்தார். நானும் உடல் பூரித்து அவருக்கு முத்தம் கொடுத்தேன்.

1947 வதுரு வடத்திலே பைத்தியக்காரன் என்ற படத்தை கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் எடுத்தார். அந்தப் படத்திற்காக இரண்டு ஸ்டில் எடுத்திருந்தேன். எம்.ஜி.ஆர். அப்போ கதர் ஜிப்பா போட்டு, கழுத்தில் உருத்திராட்சம் போல மணி கட்டிக் கொண்டிருப்பார்.

எடுத்த அந்த் இரண்டு ஸ்டில் அப்போது தேவைப்பட்டது. உடனே எம். ஜி. ஆர். என்னை அழைத்து, ''20-9-1947 அன்று பைத்தியக்காரன் படத்தின் போது ரெண்டு ஸ்டில் எடுத்திருக்கீங்க. அது இப்போது வேணும்'' என்றார்.

புரட்சித் தலைவருக்கு நாகராஜ-ராவ் முத்தமிடும் காட்சி!

உடனே வீட்டுக்கு வந்து, ஒரிஜினல் வைத்திருக்கும் பெட்டிகளைத் திறந்து தேடினேன. அந்த ஸ்டில் மேல் கவரில் 20-9-1947 என்றே எழுதியிருந்ததைப் பார்த்து திடுக்கிட்டு ஆச்சரியப்பட்டேன். தேதி சரியாக இருந்தது கண்டு அவர் நினைவாற்றலைப் பாராட்டி சந்தோஷப்பட்டேன்.

நாடோடி மன்னன் படம் பார்க்க ஒருமுறை என்னை அழைத்தார், படத்தை ஒரு ரீல் பார்த்ததற்குப் பிறகு, 'இந்த படம் 100 நாள் ஓடும்' என்று கூறினேன். அப்படி ஓடினால் ஆயிரம் ரூபாய் தருகிறேன் என்று எம்.ஜி.ஆர். சொல்லி, பந்தயம் கட்டினார்.

அப்போது அன்பில் தர்மலிங்கம் கூட இருந்தார். எம்.ஜி. ஆர். அண்ணனாவது ஆயிரம் ரூபாய் தருவதாவது, தரமாட்டார் என்று எல்லோருமே சொன்னார்கள்.

நாடோடி மன்னன் படம் 100 வது நாள் விழாவில் அறிஞர் அண்ணா வந்து பேசினார். அப்போது எம்.ஜி.ஆர். என்னைப் பார்த்து, 'வீட்டுக்குப் போகும்போது என் வீட்டுக்கு வந்து போங்கள்' என்றார். அப்போது அவர் லாயிட்ஸ் ரோட்டிலிருந்தார்.

அவர் சொன்னபடி நான் வீட்டுக்குப் போனேன். கவர் மீது 'அன்பு நண்பருக்கு' என்று எழுதி, அவரது அண்ணன் சக்ரபாணியிடம் கவரைக் கொடுத்து என்னிடம் கொடுக்கச் சொன்னார்! 1001 ரூபாய் கவருக்குள்ளே இருந்தது. யார் தரமாட்டார் என்று சொன்னார்களோ, அவரை விட்டே எனக்குப் பணம் கொடுக்கச் செய்தார்.

நான் 1000 படங்களுக்கு மேல் ஸ்டில் போட்டோ கிராபராக வேலை செய்திருக்கிறேன். எம். ஜி. ஆர். நடித்த படங்களிலே 5, 6 படங்களைத் தான் செய்திருக்க மாட்டேன்.

எந்த பெண்களுக்கும் எம். ஜி. ஆர். மரியாதை தருவார். அவர்கள் நடிகைகளாக இருந்தாலும் சரி, வேறு யாராக இருந்தாலும் சரி, பெண்களை மதிப்பார்; தனி மரியாதை தருவார்.

பி. யு. சின்னப்பா, பானுமதி நடித்த ரத்ன குமார் படத்தில் எம்.ஜி.ஆர். ஈட்டிப் பிடித்து நின்று கொண்டிருந்தார்.

அப்போது பானுமதி என்னை அழைத்து, எம்.ஜி. ஆரைக் காட்டி, ''அது யார்'' என்றார்.

இந்த 'பரதநாட்டிய சூடாமணி' யார்?

விவரம் உள்ளே...



"யாரோ ஒரு ஜுனியர் ஆர்ட்டிஸ்ட்" என்று நான் பானுமதியிடம் தெலுங்கில் சொன்னேன். ஏன் அப்படிக் கேட்டார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. அவரிடம் அப்போதே, சம் அட்ராக்ஷன்ஸ் இருந்ததால், அப்படிக் கேட்டிருப்பாங்க.

நான் ஒரு முறை உடம்பு சரியில்லாமல் நோயாக இருந்தேன். அதனால் பட ஷூட்டிங்குக்கு வரவில்லை. என் மகனைப் பார்த்து, "எங்கே அப்பா" என்றார்.

'அவருக்கு உடல் நன்றாக இல்லை!, என்றான். என் மகன்.

உடனே அவருடைய டாக்

டர் பி.ஆர்.எஸ்ஸை அனுப்பி வைத்தார்.

அவர் வந்து என் உடம்பைப் பார்த்து மருந்து கொடுத்தார். நான் அவருக்குரிய பணத்தைக் கொடுத்தேன். "பணம் வாங்கினால் எம்.ஜி.ஆர். கோபப்படுவார்" என்று வாங்க மறுத்து விட்டார்.

என்.டி.ஆர். சொந்த படங்களில் எல்லாம் நான் வேலை செய்திருக்கிறேன்.

எம்.ஜி.ஆர். சிறந்த நடிகர் இயற்கையான நடிகர்! அவர் சிரிப்பதை நீங்கள் பார்த்திருப்பீர்களே! எவ்வளவு அழகாக இருக்கும்?

அதே சிரிப்பில் சிவாஜியைப் பாருங்கள். வாயும் வீங்கும் முகமும் வீங்கியிருக்கும். சிவாஜி நல்ல நடிகர்தான். ஆனால் Proud way of acting.

எம்,ஜி.ஆர். அப்படியல்ல, Real way of acting. எம். ஜி. ஆர். சண்டை காட்சிகள் எல்லாம் நன்றாக இருக்கும்.

உலகத்தின் தலைசிறந்த நடிகர் எம்.ஜி.ஆர். இயற்கை தந்த நடிகர். குடும்பத்தோடு அவர் படத்தைப் பார்க்கலாம். மற்றதெல்லாம் கச்சடா! "You have to Create the Character Realy.

நாடோடி மன்னனில் எம். ஜி.ஆர். என்னென்ன பாயிண்டுகளை வச்சாரோ, அந்த சம்பவங்கள் எல்லாம்தா இப்போ நடக்குது. பாடல்லே வசனத்திலே, கதையிலே, எல்லாம் என்ன சொன்னாரோ அதா நடக்குது.

எம்.ஜி.ஆர். திரை மறைவிலே ஒரு கவிஞன். அவர் சொன்னதைத்தான், பாடல்களிலே எழுதினார்கள்.

இப்போ சிலர், நான்தான் நடிகர், கவிஞர், இசையமைக்கறவர், கதாசிரியர், டைரக்டர், எடிட்டர் எல்றெல்லாம் சொல்லிக் கொள்கிறார்கள்.

எம்.ஜி.ஆர். இவையெல்லாமே தெரிந்து வாழுகின்ற கடவுள்! Living god, in Cornation of god, which god, We do not know. Jesues also incornation of god தான். He is done good too. M.G.R. th3 same Character. அதையே தான் இப்போ எம்.ஜி.ஆர். செய்கிறார், இல்லையா?

எம்.ஜி.ஆர். முதல்வரான பிறகு என்னைக் கூப்பிட்டுத் தான் முதன்முதலில் படம் எடுக்கச் சொன்னார். நானும் போய் எடுத்தேன். அவர் எப்போது, என்னைப் பார்த்தாலும் 'Bless me, Bless me என்பார்.

எதுக்கு எ.பேலே அவ்வளவு ஆசை வச்சிருக்காருன்னு எனக்கே தெரியலே, எப்படின்னும் புரியலே! அவருகிட்ட பழகிற போதே எனக்கெல்லாம் ஒரு பயம்தான்! அவ்வளவு மரியாதை வச்சிருக்கோம்!

மெட்ராஸ் போட்டோ கிராஃபர் சொசைட்டி ஒரு விழா நடந்தியது. முதலமைச்சரான பிறகு அதிலே எனக்குப் பொன்னாடை போர்த்திப் பாராட்டி, 'நம்ம ஜாதகமே ராவிடம் தான் உள்ளது' என்றார்.

எம்.ஜி.ஆர். முதல்வரான பிறகு; எங்கள் தொழிலே டல்லாகி விட்டது. அவர் காட்டிய மரியாதை, அன்பு இப்போது எந்த நடிகரிடமும் இல்லை. இப்போதிருப்பதெல்லாம் காக்கா கூட்டம், எல்லாம் எம்.ஜி.ஆர். போலத் தான் டிரஸ் செய்துகொண்டு நடிக்க விரும்புகிறார்களே தவிர, எம்.ஜி.ஆர். பழைய படங்களைப் போல ஒண்ணு கூட வரலே.

ஒரே ஒரு எம்.ஜி.ஆர். தான் வரமுடியும். ஆயிரம் வருஷமானாலும் இன்னொரு எம். ஜி.ஆர். வரமுடியாது. யாராலும் வரமுடியாது. ஒருவேளை நடிகராக வரலாம்! முதலமைச்சராக,வரமுடியுமுன்னு நினைக்கிறீங்களா? எம்.ஜி.ஆர்., எம். ஜி.ஆர். தான்! எதிலும் அவரைப் போல வரமுடியாது. ●

மாண்புமிகு வீரப்பன் அவர்கள், எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் மேனஜராக இருந்தவர்! அந்த கம்பெனியை நல்ல நிலைக்கு முன்னுக்குக் கொண்டு வந்தவர். நல்ல நிர்வாகியாக இருப்பவர். அவர் தான் எம். ஜி. ஆர்., எம்.ஜி.ஆர். தான் வீரப்பன். அந்த அளவுக்கு எம்.ஜி. ஆரோடு ஒன்றிப் பழகி, அவருடைய நுட்பங்களை எல்லாம் உணர்ந்தவர். எம்.ஜி.யாரிடம் ஏறக்குறைய நாற்பதாண்டு காலப் பழக்கம் விழக்கம் அவருக்குண்டு. நன்றாக அவரைப் புரிந்து நடப்பவர் வீரப்பன் அவர்கள்.

●

சினிமா கொட்டகைகளை வாங்க நடிகைகள் போட்டா போட்டியா?

நடிகர் திலகம் சிவாஜி கணேசன், சென்னை அண்ணா சாலையிலே உள்ள சாந்தி தியேட்டரை விலைக்கு வாங்கினார்.

சென்னை மிட்லண்ட் தியேட்டரை சினிமா நடிகை ஜெயப்பிரதா என்பவர் வாங்கியுள்ளார்.

அதே போல, மதுரையில் பிரபல டாக்டர் ஒருவரால் நடத்தப்படும் நவீன சினிமா கொட்டைகள் இரண்டு உள்ளன. ஒன்று நடனம் மற்றொன்று நாட்டியா என்ற பெயருடையவே அவை.

அந்த இரு தியேட்டர்களும் குளிர் பதன வசதிகளமைந்தவை.

இந்த இரண்டு சினிமா கொட்டகைகளை விலைக்கு வாங்க எண்ணிய நடிகை அம்பிகா அதற்கான புரோக்கர்களையும் பிடித்து அனுப்பினார்.

தியேட்டர் முதலாளி, அம்பிகா தூதுவரிடம் விலைக்குத் தரமுடியாது என்று மறுத்து விட்டாராம்!

இந்த செய்தியைக் கேள்விப்பட்ட நடிகை ஸ்ரீ தேவி, அந்தத் தியேட்டர்களை விலைக்கு வாங்கிட, அவர் சில புரோக்கர்களைப் பிடித்து அனுப்பினாராம்!

அந்தப் புரோக்தர்களுக்கும் தியேட்டர் முதலாளி. பெப்பே...காட்டி விட்டாராம்.

அதுமட்டுமல்ல, 'தியேட்டர்களை விற்பதாக இல்லை' என்று புரோக்கர்களிடம் அறைந்தாராம்!

சினிமா நடிகைகள் எல்லாம் ஏன் இப்படி தியேட்டர்களை விலைக்கு வாங்க, இப்போது முண்டியடித்து ஓடுகின்றார்களோ தெரியவில்லை.

எதற்காக இந்தப் போட்டா போட்டி? நடிகர்களில் பெரும்பாலோர் இப்படி ஓடி ஆடி அலையாத விவகாரத்துக்கு, நடிகைகள் மட்டும் ஏன் அலைகிறார்கள்?

அசையா சொத்துக்கு ஏனிந்த அலைகள் ஓயாமல் அலைகின்றன?

இதில் என்ன கருப்போ, என்ன வெள்ளையோ அவர்களுக்குத்தான் வெளிச்சம்!

கர்ப்பிணிகள் கலகலவென்று சிரிக்கலாமா?

சென்னையில் 'பேசும் படம் என்ற சினிமா ஓடிக்கொண்டிருந்ததல்லவா? அந்தப் படம் ஓடிக்கொண்டிருந்த கொட்டகை ஒன்றில். கண்ணம்மா என்ற நிறைமாதக் கர்ப்பிணி படம் பார்த்துக் கொண்டிருந்தாள்

கமல், அமலா. பிரதாப் டினு ஆனந்த் நடித்த நகைச் சுவை படம் பேசும் படம் என்ற சினிமா!

படத்திலே வருகின்ற பல வித வித்தியாசமான நகைச் சுவைக் காட்சிகளைக் கண்டு, அந்தத் தியேட்டரே சிரிப்பாலும், கையொலிகளாலும் அதிர்ந்து கொண்டிருந்தது!

நகைச்சுவைக் காட்சிகள் ஒன்றன் பின் ஒன்றாக தொடர்ந்து ஓடுவதைக் கண்ட அந்த நிறைமாதக் கர்ப்பிணி கலகலவென்று, குலுங்கி குலுங்கிச் சிரித்தபடியே இருந்தாள்.

கட்டுக் கடங்காத அந்தச் சிரிப்பு. அவளுக்கு பிரசவ வேதனையை உண்டு பண்ணி விட்டது. உடன் வந்தவர்களும் அந்த சினிமா கொட்டகை நிர்வாகியும் சேர்ந்து நிறைமாதக் கர்ப்பிணி கண்ணம்மாவை மருத்துவ மனையிலே கொண்டு போய் சேர்த்தனர்,

நகைச்சுவைக் காட்சிகளைக் கண்டு குலுங்க குலுங்கச் சிரித்ததின் பயனாய், சிரிப்பும் வேதனையும் கலந்த சுகப்பிரசவத்தால் அழகான ஆண் குழந்தையைப் பெற்றுச் சிரித்தாளாம் குழந்தையைப் பார்த்துப் பார்த்து!



'வேதம் புதிது' படத்தில், ராஜா, அமலா.

—4-ம் பக்கத் தொடர்ச்சி—

மக்கள் மன்றத்தின் ஒவ்வொரு கூட்டத்திலும், பொது மக்களையும் கழகத்தவரையும் என் ரத்தத்தின் ரத்தமே என்றழைத்து பாச மழை பொழிந்தார்!

சொல்லேருழவராக மாறும்போதெல்லாம், 'அண்ணா நாமம்' வாழ்க என்றே முடிப்பார்!

அண்ணாவின் பெயரையே தனது பூந்தோட்டத்திற்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்ற பெயரைச் சூட்டினார்.

அலை கடலுக்கு அப்பாலும் சரி, இந்திய துணைக் கண்டமானாலும் சரி, எங்கும் — எப்போதும், — எவரும்— அண்ணா பெயரைக் கூறிய பிறகுதான், புரட்சித் தலைவரை நினைவுபடுத்திக் கொள்ளும் நிலையை நாட்டினார்!

அண்ணா திருவுருவத்தை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கட்சிக் கொடியிலே பொறித்து, கட்சி

கலைஞர்களை மதிக்கும் புரட்சித் தலைவர்

யின் சின்னமாக்கியது, இதுவரை எந்த நன்றியாளனும் விசுவாசியும் செய்யாத ஒன்றாகக் காட்சியளித்தது.

பூந்தோட்டக் காவல்காரனாக புரட்சித் தலைவரே தேர்வு செய்யப்பட்டார்.

மக்கள் பலத்தை, தாய்க்குலத்தின் கருணையை நம்பி, தனது அரசியலை பயணத்தைத் தொடர்ந்தார்! தன் நிலை விளக்கம் தந்தார்! புரட்சித் தலைவர் பொருளாளர்! அதனால் தி. மு. கழகத்தை நியாயம் கேட்டார்! திகைத்தது அது!

அவரைப் பொய்யனாக்கிட, மக்களிடம் பொய்ப்பிரச்சாரத்தைத் திட்டமிட்டுச் செய்தது! தி. மு. கழகம்!

கட்டபொம்மனைக் காட்டிக் கொடுத்த எட்டப்பன் எம். ஜி. ஆர்.

திப்பு சுல்தானுக்குத் துரோகம் புரிந்த பூரணய்யா!

சிவாஜியைச் சீர்குலைத்த காகபட்டன்! கிருஷ்ணாஜி, பாஸ்கர்!

சாம்பாஜி சாம்ராச்சியத்தைச் சரித்துவிட்ட கவி கலேஷா!

சோழ சாம்ராஜ்ஜியத்தின் இறுதிக்குக் கல்லறை கட்டிய வேதியர் வெங்கண்ணா!

திருமலை நாயக்கனுக்குத் துரோகம் செய்த நரசிம்மபையன்!

குன்றெடுக்கும் நெடுந்தோளன், தென் திசைக் கோமான் இராவணனைக் காட்டிக் கொடுத்த விபீஷனன் எம். ஜி. ஆர்.

என்றெல்லாம் அவர்மீது தி.மு. கழகம் பழி அம்புகளைச் சரமாரியாக எய்தது.

அந்த அம்புகளால் அவர் உடலும் ரணமாகவில்லை! உள்ளமும் வடு பெறவில்லை!

அவர்கள் சுமத்தும் பழியைக் கேலியைக் கிண்டலை அவர் உண்ணீராகப் பருகவில்லை!

தண்ணீரெண்ணி கை கால்களைக் கழுவிக் கொண்டார்!

அவரவர் வினைகள் எப்படியோ, அவற்றை அவரவரே அனுபவிப்பார்கள் என்று வாளாவிருந்து விட்டார்.

அறிஞர் அண்ணாவின் செல்வாக்கும்— சொல்வாக்கும்— அன்பும் பண்பும்— அறிவும் அவருக்குக் கேடயங்களாக உதவின!

தொடர்ந்தார் பயணத்தை! நடந்தார் அண்ணா வழியில்! திரண்டனர் மக்கள் அவர் பின்னால்!

தனவந்தரை அவர் மதிக்கவில்லை! தரித்திரர்களை மனதிலே ஏந்திக் கொண்டார்!

அராஜகங்களைக் கட்டவிழ்த்து விட்டதன்பலன், வத்தலக் குண்டு ஆறுமுகம்—பூலாவாரி சுகுமாரன் போன்ற பற்பலர் படுகொலையானார்கள்!

பதட்டப்படவில்லை அவர்! பாறைபோலாக்கிக் கொண்டார் மனதை!

பழி போட்டவர்கள் சிந்தனைகள், சதிகள், படுகுழிப் பிணங்களாயின!

இறுதியாகப் பிரதமருக்கு மாலை சூட்டினார் புரட்சித் தலைவர்

ஏழைகள் கூக்குரல், நடுத்தர மக்களின் நாணயம் தி. மு. கழகத்தை விட்டு அகன்றது! ஆட்சியை இறக்கும் நிலைக்காளானது!

அண்ணா அவர்கள் ஆவி, இருகையால் மின்னலைப் பிடித்து, மக்கட் பகைவர்களை விரட்டி அடித்தது.

அண்ணா பேசிய கருத்துக்கள் எதிரொலித்ததைக் கண்டு, அவர்களது குடலே குலுங்கிச் சரிந்தது!

அவ்வப்போது உருவான வங்கக் கடலின் காற்றுச் சீற்றங்கள், தி. மு. கழக அழுக்காற்றுச் செயல்களை, ஓட ஓட விரட்டி, சேதத்தை ஏற்படுத்தியது!

அதன் விளைவு! அரசியலில் பெரிய பெரிய அதிசயங்கள் நடந்தன!

திண்டுக்கல்! அவற்றுள் முதலாவதான ஒன்று! புரட்சித் தலைவர் அற்புதத்தின் சிகரம்!

புரட்சித் தலைவரின் 'சத்யத்தாய் சத்யா!'

தேர்தலில், தி. மு. கழகம் தனது ரத கஜ துரக பதாதிகளைப் பயன்படுத்திற்று!

தண்டத்தைத் தூக்கித் தலைகீழ் நர்த்தனமாடிற்று! முடிவு! ஆளும்கட்சியான தி.மு.க. தோற்றது!

இந்திரா காங்கிரஸ் மரத்தின்மீது தோல்வி, இடி விழுந்து பட்டுப் போனது!

காமராசர் தேர்தல் மன்னர்! ஊமையாக இருந்தபடியே பணியாற்றியும், கணக்குத் தவறியதால் விடை தோல்வியே ஆனது!

ஆல் இண்டியா ரேடியோ, சென்னை மாநிலச் செய்திகள் எல்லாமே அண்ணா தி.மு.கழகம் வெற்றி என்று எக்காளம் ஊதியது!

அவர்களை எதிர்த்துப் பாடப்பட்ட பாடல்தான் கபிலரகவல்!

"உலகத்தீரே! உலகத்தீரே! மாரிதான் சிலரை வரைந்து பெய்யுமோ? -மாநிலம் சுமக்க மாட்டேன் என்னுமோ?-கதிரோன் சிலரைக் காயேன் என்னுமோ?- குலமும் ஒன்றே குடியும் ஒன்றே! - பிறப்பும், ஒன்றே! இறப்பும் ஒன்றே" என்று பாடிக் கொண்டே சாதி ஆசாரங்களை எதிர்த்து அறிவு கொளுத்தினார்!

இறுதியில் வளர்ப்புத் தந்தையும் தாயும் இறந்த பின்பு ஆரூர் பார்ப்பனர் முகத்திலே விழிக்காமல், ஊரை விட்டே போகிறார்!

பாடல் பெரியது! நாம் சுருக்கி அடி எடுத்துக் கொடுத்தோம்-அவ்வளவுதான்!

இதுதான் கபிலரகவலில் பாடப்பட்ட சாதிக் கதை! இதன் கருதான் 'வேதம் புதிது' என்று கருதுகின்றோம்!

இயக்குநர் பாரதிராஜா அவர்கள் அந்தக் கருவை, திரை உருவாக்கி, மிக அழகாக, அற்புதமாக, ஒரு சமுதாயப் பாடத்தை படமாக்கியிருக்கின்றார்.

வழக்கமாக வந்து போகும் டப்பா படமல்ல இது!

சமத்துவ வாழ்வுக்கு வழி வகுக்கும் வளர்நிலா, வேதம் புதிது!

சாதியத்தின் கீழ்மேல் மக்களைச் சாய்க்கும் பண்பாட்டு வாள் - வேதம் புதிது!

சமுதாய ஞானத்தின் திருப்பம்! தமிழர்தம் ஒழுக்கத்தின் விழுப்பம்!

'அலைகள் ஓய்வதில்லை' என்ற படத்தில் மத பேதங்களின் மதத்தை மிதித்தெறிந்தார்.

மனித நேயக் காதலைவிட மதச் சின்னங்கள் மதிக்கத்தக்கதல்ல என்பதற்காக அவற்றின் சின்னங்களை அப்படத்தில் அறுத்தெறிந்தார்!

அந்த அற்புதக் கருத்தை, சமுதாய வளர்ச்சிக்கான புதிய சிந்தனையை, எந்த அரசும் மதிக்கவில்லை, மரியாதையும் காட்டவில்லை அப்போது.

'காலம்' ஆகிவிட்ட புரட்சித் தலைவர் ஒருவர்தான், பாரதிராஜா கருத்தைத் தனது சிந்தனை மகுடமாக மதித்தார்!

மயிலாப்பூர் மாங்கொல்லைத் திடலில், அண்ணா தி.மு.க. சார்பாக, பாரதிராஜாவுக்குப் பாராட்டு விழா நடத்திப் பெருமைப் படுத்தினார்.

மனதிடமுள்ள அந்த மாமனிதன் மறைந்து விட்டாரே இப்போது!

யாரிருக்கிறார்கள் தற்போது மனமாரப் பாராட்டி வரவேற்க!

சந்தனப் பெட்டியிலே வாழும் எம் கலையுலக சந்த

அன்றிலிருந்து எந்த அறிவிப்புகளை, யார் வெளியிட்டாலும், அண்ணா தி.மு.கழகம், அண்ணா தி.மு.கழகம் என்றே கூற வேண்டிய நிலையை உருவாக்கி விட்டார் புரட்சித் தலைவர்!

அதனால், அண்ணா பெயர் எங்கும் எதிலும், அலை கடலுக்கப்பாலும் பரவியதால், எம்.ஜி.ஆர். நன்றி மறவாமைத் தொண்டுள்ளச் சிறப்பும் பண்பும் குன்றின் ஒளிபோல காட்சி தந்தது!

இவற்றையெல்லாம் அண்ணா கண்டதும் காணாததுமாக உறை மழைபோல நின்று வாழ்த்தினார்!

இதற்குப் பிறகு, கோவை புதுவைத் தேர்தல் மணிகள் ஒலித்தன!

மணியோசை கேட்ட கட்சிகளெல்லாம் வரிந்து கட்டிப் பணியாற்றின.

இதில் ஒரு சிறப்பு என்னவென்றால், புரட்சித் தலைவரைப் புறமுதுகிடச் செய்ய, காமராசரும் இந்திரா காங்கிரசுகளும் ஒன்றிணைந்து பணியாற்றின!

எதிரிகளாக இருவரும் காட்சியளித்தாலும், புரட்சித் தலைவரை எப்படியாவது தேர்தலில் தோற்கடித்தாக

அறிஞர் அண்ணாவுக்கு இறுதி நிகழ்ச்சி கலைவாணர் சிலை திறப்பு விழா
புரட்சித் தலைவருக்கு இறுதி நிகழ்ச்சி நேரு சிலை திறப்பு விழா

வேண்டும், என்ற வைராக்கிய சபதத்தோடு பணியாற்றும் நெருக்கடி அவர்களுக்கு உருவானது!

ஆளும் கட்சியான தி.மு.க., தனது அரசுப் படைகளையும் கழகப்படைகளையும், பணப்படைகளையும் தயார் செய்து தேர்தல் வேலை செய்தது!

மூன்று சக்திகளின் முதுகெலும்பான தண்டு வடத்தை தகர்த்தெறிந்தார் புரட்சித் தலைவர்!

இடுப்பே இல்லாத கட்சிகளெல்லாம் ஐய்யோ குய்யோ என்றோலமிட்டு, ஓடி மறைந்தன!

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், தமிழகத்தில் ஹெர்குலிஸ் பலத்தோடு தோள்தட்டி உலா வந்தது!

அண்ணா அவர்கள் ஆசி, காலத்தோடு பெய்த முன்மாரி பின்மாரிபோல் நின்று பூவானத் தூறலைத் தூவியது!

உதய சூரியனாக நின்ற அண்ணா பெருமையை, கார்மேகங்கள் அடிக்கடி சூழ்ந்ததால், அதன் ஒளி மங்க ஆரம்பித்ததை மக்கள் மனதாரக் கண்டார்கள்!

சூரியன்தான் சந்திரனுக்கும், நட்சத்திரங்களுக்கும் ஒளியூட்டும் முதற்கோள் என்பதைத் திடமாக நம்பிய மக்கள், சந்திரனை ஏற்றிப் போற்றிக் கொண்டாடிடும் கோலாகலம் அரசியலில் புதுத் திருப்பு முனையை உருவாக்கியது.

சந்திரனும் சூரியனிடமிருந்து பெற்ற ஒளியைப் பாதை தவறாமல் பொழிந்து மக்கள் மதிப்பைப் பெற்றது!

சந்திரனின் ரத்தத்தின் ரத்தமான கழகக் கண்மணிகளும் கழக வளர்ச்சிக்குச் சுடருதறிப் பணியாற்றினார்கள்.

அதன் எதிரொலி 4-12-1971-ல் நடைபெற்ற சட்ட மன்றத் பொதுத் தேர்தலில் முதலமைச்சரானார்.

பூந்தோட்டக் காவல்காரனாகப் பொலிவுடன் விளங்கிய புரட்சித் தலைவர், அரியாசனம் என்ற வெண்கொற்றப் பூச்சக்கரக் கொடையின் கீழ் பவனி வந்தார்!

ஆட்சி சிம்மாசனத்திலே ஆரவாரமாக அமர்ந்த புரட்சித் தலைவர், தமிழ் நாட்டை ஒரு தாஜ்மகாலாக்க அரும்பாடு பட்டார்.

தமிழ் நாடு என்ற பழ மரத் தோட்டத்திற்குள்ளே நாட்டின் கனிகளையும், நலன்களையும் விருந்தாக உண்ண, மக்களைத் தயார் செய்தார்!

ஆட்சி வானம், பிரமிப்படைந்தது! அவரை அரவணத்து இயங்கியது!

அதிகாரிகளைப் பார்த்தார்! தனது ரத்தத்தின் ரத்தங்களை நோக்கினார்! அறிவுரைகளை வழங்கினார்!

இலஞ்சம் என்ற மண்வெட்டியைக் கொண்டு, உங்களுக்குள்ளேயே வெட்டிக் கொள்ளாதீர்கள்!

தி.மு,க. எடுத்த பெயரை' நாமும் ஏற்கக் கூடாது.

அவர்கள் பூட்டிய அதிகார நுகத்தடியை அடியோடு முறிப்போம்!

ஆட்சி இயந்திரத்திலே உண்டான கட்டுக்களை கழற்றி, அவிழ்க்க வேண்டிய முடிச்சுகளை அறுப்போம் என்று அரசு இயந்திரத் தொழில் நுட்பத்தினரையும் கூட்டிப் பேசினார்.

அக்கிரமக் கறைகள், ஆணவ அழுக்குகள், சட்டமீறல்களின் சாகசம், அதிகார துஷ்பிரயோகக் கற்பழிப்புகள் அனைத்தையும் ஒழித்தார்!

செருப்புத் தேயத் தேய நடந்து, நடந்து, நா வறள வறளப் பேசிப் பேசி, இறக்கை முளைத்த சுயநலத்தோடு ஊடுருவிய குபேரர்களை அடையாளம் கண்டார்!

அதை உருவாக்கியவர்கள், பொதுமக்கட் துரோகிகள், விரோதிகள் என்று கருதி, அவற்றை அடியோடு தகர்த்தெறிந்தார் புரட்சித் தலைவர்!

திருடர்கள் அகப்பட்டு விழிப்பதைப் போல, 'சர்க்காரி'யாவில் சிக்கித் திணறியது தி. மு, கழகம்!

இந்திராவைத் தாயே என்றார்கள்! மொரார்ஜியைத் தந்தையே என்றார்கள்— அதிலே இருந்து விடுபட!

முகத்தைக் காட்ட முடியவில்லை தமிழ் மக்கள் முன்பு! முதுகையே திருப்பித் திருப்பிக் காட்டினார்கள்! பாவம்!

அப்போது தான் அண்ணாவைத் தெய்வமென நம்பி, சமாதி நோக்கி ஓடி, மாலை போட்டுத் தக்க மரியாதை காட்டினார்கள்.

சடங்கு மரியாதையாக அல்லாமல், சத்திய மரியாதையாக ஊமை போல ஓடினார்கள்!

அதற்கு முன்பு வரை' அண்ணாவைப் பின்னே தள்ளி ஆட்சித் தலைவரை முன்னே நிறுத்திப் போட்டோ போஸ் கொடுத்தார்கள்!

சந்தனப் பெட்டியை விட்டு அண்ணா எழுந்து வந்து கருணையா காட்டுவார்? உயிரோடிருக்கும்போது என்றால் அவர் பண்பு அதைச் செய்திருக்குமே!

காதலை அண்ணா மீது சத்தியமாகக் காட்டாததால் சாதலான ஆட்சியிறக்கத்திற்கு ஆட்பட்டார்கள்!

அவமானத்தைப் போர்வையாகப் போர்த்திக்கொண்டு கருப்பு சிவப்பாடைகளைக் களைந்தெறிந்து விட்டு. வனவாசமாக வாழ்ந்தார்கள்!

அலங்கோல ஆட்சியின் விளையாடல்களின் அரங்கேற்றத்தைக் கண்டு புரட்சித் தலைவர் பாடம் பெற்றார்.

அதனாலே, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் ஆட்சியை, முட்களுக்குள்ளே விதைக்கப்பட்ட விதையாகாமலிருக்க எச்சரிக்கையாக நடந்தார்!

விந்தையான விவசாயியாக உழ ஆரம்பித்தார்! கட்டளையைக் காற்றாக்கினார்!

அந்தக் காற்று, கழகத் தோழர்களிடையே மெல்ல வீசி அரசியல் தூய்மையை உருவாக்கியது!

அழகான அந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழக மலர்த் தோட்டத்தை, அகலப்படுத்தி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமாக்கினார்;

ஏழைகளும் முதலாளிகளும் இணைந்து வாழ்வதற்கான கொள்கைகளைக் கொடுத்து, இதற்குப் பெயர் 'அண்ணாயிசம்' என்றார்!

—13-ம் பக்கம் பார்க்க.

தியே, நீ வாழ்த்து பாரதிராஜாவை, என்று கண்ணீர் விடுகின்றோம்!

அதேபோல 'வேதம் புதிது' படத்திலும் சாதி, சமைய, மத, ஆசார, மூடநம்பிக்கைகளை, முடிந்தவரை இடுப்பொடித்துக் காட்டியுள்ளார். திராவிடர் கழகத்தான் ஒருவனுக்கு வராத துணிவு. பாரதிராஜாவுக்கு வந்ததைப் பாராட்டுகின்றோம்!

பெரியாரும் அண்ணாவும் 'வேதம் புதிது' படத்தைப் பார்த்திடும் நிலை இருந்திருந்தால், குன்றேறி நின்றல்லவா குதூகலப் பட்டிருப்பார்கள்!

மற்றவர்களும் பார்க்க வேண்டிய படமென்று பாராட்டியிருப்பார்களே!



அண்ணா அவர்கள் கூட 'வேலைக்காரி' படத்தில் சாதிப் பிரச்னையைத்தான் கருவாக வைத்தார்கள்! அது பொதுவான கரு!

பாரதிராஜா அப்படியல்ல! குறிப்பிட்ட கருவை உருவாக்கி எதிர் நீச்சல் போட்டு எழுந்து வந்துள்ள தமிழரேறு!

தமிழ்ச் சமுதாயத்தின் மரியாதைக்கும் மாண்புக்கும் பாரதிராஜா ஒரு புத்தர்!

புத்தர் என்றால் அறிவாளர். சாதி போதையைப் பகுத்தறிவு நீரூற்றித் தெளிய வைத்தவர்!

புத்தர் கூட மதத்தை உருவாக்கவில்லை! ஒழுக்க அறநெறிப் போராட்டத்தைத் தான் உருவாக்கினார்!

பின்னாலே வந்த சில சுயநலமிகள் தான், பௌத்தத்தை மதமாக்கி, சித்தார்த்தரைச் சிலையாக்கி விட்டார்கள்.

பாரதிராஜா அவர்களின் சாதீய ஒழுக்க அறநெறிப் போராட்ட உருவமே 'வேதம் புதிது'

வசனம் எழுதிய திரு. கண்கண், அளவாக, செறிவாக, இட நெகிழ்ச்சிக் கேற்ப, தேர்ந்து, கூர்ந்து சொற்களைப் பயன் படுத்தியிருப்பது மிகமிக பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும்!

-ஆர்ட்பெல்

3-வது அட்டைபக்கக் கட்டுரை தொடர்ச்சி

இடம் பிடித்ததில்லை. பிரதி உபகாரத்தை எதிர் பாராது தர்மம் செய்யும் குணம் எல்லோருக்கும் அமைவதில்லை என்றார்.

நடிகை பத்மினி

அமெரிக்கா வந்திருந்த புரட்சித் தலைவரை நான் சந்தித்தேன். நல்ல உடல் நலத்தோடு இருப்பதாகக் கூறினார்,

அதற்குள் அவர் திடீர் என்று இப்படி ஆவார் என்று நினைத்துக் கூடப் பார்க்க முடிய வில்லை. மிகவும் வருத்தமாக இருக்கிறது. அவருடைய ஆத்மா சாந்தியடைய கடவுளைப் பிரார்த்திக்கிறேன்



சரோஜாதேவி கண்ணீர்

'என் குலதெய்வம் மறைந்து விட்டதே' என்று சரோஜா தேவி கண்ணீர் விட்டழுதார்.

என் கணவர் இறந்த அதிர்ச்சியிலிருந்து மீள்வதற்குள், எங்க வீட்டு குல தெய்வம் மறைந்து விட்டது. எனக்கே இவ்வளவு வேதனை என்றால் ஜானகியம்மாளுக்கு எவ்வளவு வேதனை ஏற்பட்டிருக்குப்.

கடவுள் மாதிரி இருந்த அவரை மறக்க முடியாமல் எத்தனையோ பேர் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அந்த ஆண்டவன் தான் தைரியத்தைக் கொடுக்க வேண்டும்.

எவ்வளவுதான் தைரியமிருந்தாலும் தெய்வத்தின் இழப்பை என்னாலும் தமிழ் நாட்டிலுள்ள அத்தனை மக்களாலும் தாங்கிக் கொள்ள முடியாது.

விஜயகுமாரி

புரட்சித் தலைவருடன் படத்திலே நடித்தேன் என்பதல்ல பெருமை. அவரது வீட்டிலே சகோதரியாக, வளர்ந்தது தான் எனக்குப் பெருமை! அவரை சேச்ச என்றுதான் அழைப்பேன். இரண்டு நாட்களுக்கு முன்பு சந்தித்தபோது 'சேச்ச உடம்பு எப்படி இருக்கு' என்றேன்.

அதற்கு நான், இப்போது சாக மாட்டேம்மா' என்று பதில் சொன்னார்.



நாகேஷ்

அண்ணன் எம். ஜி. ஆர். அன்பில் முதல்வர், பண்பில் முதல்வர், பாசம் காட்டுவதில் முதல்வர், சிரிப்பில் முதல்வர், சிறப்பால் முதல்வர், வள்ளலில் முதல்வர்! இப்படி எல்லாவற்றிலுமே முதல்வராகத் திகழ்ந்தார்.

சுடப்பட்டபோதும், குண்டடி பட்டபோதும், எமன் தொட்டபோதும், விதிகெட்டபோதும் சாகாத முதல்வர் இப்போது சாய்ந்து விட்டாரே!

டைரக்டர் சாந்தாராம்!

"எம். ஜி. ஆர். மறைவு எனது சொந்த இழப்பு. அவரும் என்னைப்போல நாடகம், சினிமா மூலம் வளர்ந்தவர், நாங்கள் இருவரும் தனிப்பட்ட முறையிலும் நண்பர்கள் நல்ல காரியங்களுக்கு உதவும் மனமுடையவர்.

குழந்தைகள் சினிமா பட்க் கழகத்தின் தலைவராக நான் அந்தக் கழகத்துக்கு எம்.ஜீ. ஆர். தாராளமாக நிதி உதவி தந்தார்' என்றார்.



எம். என். நம்பியார்

புரட்சித் தலைவர் மரணச் செய்தி கேட்டு நடிகர் நம்பியார் மயங்கி விழுந்தார். இரண்டு நாட்களாக அவர் எதுவுமே சாப்பிடவில்லை. உடல் நலமற்று காணப்படும் அவர், குளுகோஸ் தண்ணீர் கூட குடிக்க மறுத்து விட்டார். படுத்த படுக்கையாகவே இருந்து வேதனைப் படுகிறார்.

வைஜயந்திமாலா

நான் என்ன பேசறது! எம். ஜி.ஆரோடு நான் நடிச்சிருக்கேன். பாக்தாத் திருடன் படத்திலே நடிச்சேன்.

தமிழ் நாட்டின் பரத கலைக்கும் எனக்கும், எனது பரத நாட்டியத்தின் திறமைக்கும் பட்டம் சூட்டி மரியாதை செய்தவர் எம்.ஜி.ஆர்.

என் கணவர் பாலி இறந்த போது, அண்ணன் காட்டிய அன்பும், ஆதரவும் என்னால் மறக்கவே முடியாது. துக்கமாக நான் இருந்தபோது அண்ணனாக நின்று ஆறுதல் கூறி ஆற்றினார்.

SREE SURYA INVESTMENTS

SAVE WITH SREE SURYA INVESTMENTS
ATTRACTIVE TERMS OF INTEREST AWAITS FOR YOUR DEPOSITS.

FOR FURTHER DETAILS CONTACT OUR OFFICE :

FIRST FLOOR, S.C.B. SHOPPING COMPLEX,
33/3, VENKATANARAYANA ROAD,
NANDANAM, MADRAS - 600 035.

உங்கள் வளர்ச்சியே எங்கள் குறிக்கோள்

புதுமை சிட்ஸ் பிரைவேட் லிமிடெட்
குடிசை மாற்று வாரிய விற்பனை அங்காடி வளாகம்
33/3, வெங்கட நாராயணா சாலை,
நந்தனம், சென்னை - 600 035.

குறுகிய கால சீட்டுகள்

எண்	மாதச் சந்தா ரூ. பை.	மாதங்கள்	உறுப்பினர்	மொத்தம் ரூ. பை.
1	200.00	25	25	5,000.00
2	400.00	25	25	10,000.00
3	1000.00	25	25	25,000.00
4	2000.00	25	25	50,000.00

சத்யராஜ்

என்னுடைய தங்கச்சி கல்யாணத்துக்கு அவர் கோயமுத்தூருக்கு வந்தப்போ எங்க அம்மாவ கூப்பிட்டு அவருக்கு அறிமுகப்படுத்தி வச்சேன். அவர் எந்திரிச்சு நின்னு எங்க



அம்மாவுக்கு வணக்கம் செலுத்தினார்.

வயசுல அவரு எங்க அம்மாவை விட பெரியவரா இருக்கலாம். ஆனா அந்த ஒரு நிகழ்ச்சியால அவரு எங்க அம்மாவுக்கு பிள்ளையாயிட்டாரு.

எம். ஜி. ஆரோட நல்ல பழக்க வழக்கத்தை எல்லோரும் கடைப்பிடியுங்க. ஆனா தயவு செய்து யாரும் எம்.ஜி. ஆர். ஆகணும்னு ஆசப்படாதீங்க. அது முடியாது.

எம்.ஜி.ஆர். இல்லைங்கிற ஃபீலிங்கே இல்லை. ஏன்னா இத்தன வருசம் அவரு இருந்தப்ப நான் அவர ஒரு 6 தடவச் சந்திச்சிருக்கேன்.

இப்போ கூட அவரு அறிஞர் அண்ணாகிட்ட போயிருக்காரு, அவரப் பார்க்கிறதுக்கு நேரங் கிடைக்கல்லன்னு நினைப்போமே தவிர, அவரு இந்த ஒலகத்த உட்டுப் போயிட்டாருன்னு நினைக்க மாட்டோம்.

"மாபெரும் சபைகளில் நீ
நடந்தால்
உனக்கு மாலைகள் விழ
வேண்டும்;
ஒரு மாற்றுக் குறை யாத
மன்னவன் இவன் என்று
போற்றிப் பாட
வேண்டும்"

-ன்னு எங்களுக்கும் யாராவது எழுதிக் கொடுத்து ஒரு எஸ்.பி. பால சுப்பிரமணியமோ மலேசியா வாசுதேவனோ பாடினா நாங்களும் கையக்...கால தூக்கிக்கிட்டு பாடியிருப்போம்.

ஆனா எங்களால மாபெரும் சபைகளிலே நடக்கவும் முடியாது. அப்படி நடந்தா எங்களுக்கு மாலையும் விழாது.

அவர் இத்தனை நாளும் ஏழைகளுக்கு என்ன செய்யணும்னு நினைச்சாரோ அதை எல்லோரும் சேர்ந்து தொடர்ந்து செய்யணும்னு நான் ஆசைப்படுறேன்.

கலர் சினிமா

சந்தா விபரம் :

ஆயுள் சந்தா	... ரூ.	500-00
ஆண்டு சந்தா	... ரூ.	60-00
அரை ஆண்டு சந்தா	... ரூ.	30-00
தனி பிரதி	... ரூ.	2-50

விவரங்களுக்கு தொடர்பு கொள்க :

கலர் சினிமா

33-9, முதல் மாடி,
வெங்கட் நாராயணா ரோடு,
நந்தனம், சென்னை-600 035.

நாங்கள் மட்டும் ஆடக் கூடாதா?

கவர்ச்சி நடிகைகளான சிலுக்கு, பபிதா, டிஸ்கோ சாந்தி, அனுராதா, அனுஜா போன்ற நடிகைகளின் கவர்ச்சி டான்சுகள் இப்போது வெளி வரும் படங்களில் அதிகமாகக் காணப்படவில்லை. என்ன காரணமோ!

சிலுக்கு தனது கவர்ச்சி யாட்ட மார்க்கெட்டை எப்படியோ இழந்து விட்டார். ஆதனால், சொந்தப் படம் எடுக்கப் போய்விட்டார்.

டிஸ்கோ சாந்திக்குத் தமிழ்ப்பட மார்க்கெட் குறைந்து விட்டதால், மலையாளப் படங்களிலே வேட்டி, ரவிக்கைகளை தொப்புள் தெரிய காட்டிக் கொண்டு நடிக்க ஆரம்பித்து விட்டார்.

பபிதா என்ற கவர்ச்சி நடிகை, அரக்கோணம் கோர்ட்டிலே தனது புருஷனுக்காக அழுது போராடிக் கொண்டிருக்கின்றார்.

அனுஜா என்ற கவர்ச்சி நடிகை, சிங்கப்பூரிலே போய் பிறந்தமேனி ஆட்டம் ஆடி, போலீசாரிடம் சிக்கி, ஜெயிலுக்குள் தள்ளப்பட்டு வெளி வந்த பின்பு, குடும்பம் நடத்துகிறாராம்!

அனுராதாவுக்கு இருந்த அகன்ற மார்க்கெட் தற்போது குறுகிவிட்டதால், அவருக்கும் கவர்ச்சியாட்ட மார்க்கெட் சரிந்து விட்டது.

இதனாலே, கவர்ச்சி நடிகைகள் டான்சுகள், தற்போது படங்களில் அதிகமாக வெளி வரவில்லையோ!

போகட்டும், படங்களில் கதா நாயகிகளாக நடிக்கும் நடிகைகள், இப்போது கவர்ச்சி ஆட்டங்களை ஆட ஆரம்பித்து விட்டார்கன்.

நடிகை ராதா 'உழவன் மகன்' படத்தில் ஆடும் ஆட்டமே ஒரு கவர்ச்சியாக இருக்கிறதல்லவா? இதற்குமேல் அனுராதா வேண்டுமா ஆட

'சட்டம் ஒரு விளையாட்டு' படத்திலும் ஆடுகிறார் ராதா! நன்றாக இல்லையா என்ன? ரசிகர்களைத் தான் கேட்க வேண்டுமோ!

எனவே. டான்ஸ் நடிகைகளிடம் இருக்கும் 'கவர்ச்சிக் கிக்கை' கதாநாயகிகளே தந்து விடுகிறார்களே ரசிகர்களுக்கு!

அதனால்தான், கவர்ச்சி யாட்டம் ஆடி சினிமா மார்க்கெட்டைப் பிடித்து விடலாம் என்று நினைத்த நடிகைகள் பாடு திண்டாடமாகி விட்டதோ!

படம் எடுப்பவர்கள், கவர்ச்சி ஆட்டமாடும் நடிகைகட்கு, தனியாகப் பணம் கொடுக்க வேண்டியிருக் கிறது!

கவர்ச்சி டான்சுகளுக்கென்று தனியாக ஷெட்டும்— செலவும் வேறு ஆகிறது!

அதனால். கதாநாயகிகளின் டூயட் சாங்கிலோ, அல்லது அவர்களுடைய சில சம்பவங்களிலோ டான்ஸ் வரும்படிச் செய்து விட்டால் போதும்! பணமும் மீதிதானே?

கதாநாயகிகளே கவர்ச்சியாகத்தானே இருக்கிறார்கள்? பிறகு எதற்கு கவர்ச்சி டான்சுகள்? அதற்காக நடிகைகள்!

இதுவும் ஒரு வகையில் பட முதலாளிகட்குக் கதாநாயகி செய்யும் உதவிதானே?

ஜோதி லட்சுமி ரேடியோ திருட்டு!

பதினேழு கார்களில் ரேடியோ திருடி கை வரிசை காட்டிய சுப்ரமணியன், சாரதி கண்ணன் என்ற வாலிபர்கள், நடிகை ஜோதிலட்சுமியின் காரிலிருந்த ரேடியோவையும் திருடினார்கள்.

சென்னை பாண்டி பஜாரில் குற்றப்பிரிவு போலீஸ் இன்ஸ்பெக்டர் கண்ராஜன், ரோந்து சுற்றி வந்தபோது, அவர்களைக் கைது செய்தார்

தேரோடும் வீதியிலே'

சூப்பர் ஸ்டார் மூவிஸ் பட நிறுவனம், பெரும் பொருட்செலவில் 'தேரோடும் வீதியிலே' என்ற படத்தைத் தயாரித்து வருகின்றனர்! டிஎச். துளசி, நிர்வாகியாகவும், தயாரிப்பாளராகவும் உள்ளார்

கதை, திரைக்கதை-வசனம்-இயக்குநர் பொறுப்புக்களை லியாகத் ஷா, ராஜ் சிற்பி ஏற்றுள்ளனர். லியாகத் ஷா பாடல்களுக்கு ராஜ் பாஸ்கர் இசையமைக்க, ஒளிப்பதிவை ஜெயபால்-கே.எச்.ராவ் ஏற்க, ஆர்ட் டைரக்டராக மோகன் தாஸ் இயங்க. பி.ஆர்.ஓ. வாக ராதாகிருஷ்ணன். பாலு ஆகியோர் கவனிக்கின்றனர்.

கம்ப்யூட்டர் முறையில் ஆறு பாடல்களையும் பதிவு செய்துள்ளார்கள்.





''ஒரு ஜீவன் ஒரு காவியம்''

ஸ்ரீ நாராயணன் கிரியேஷன்ஸ் தயாரிக்கும் 'ஒரு ஜீவன் ஒரு காவியம்' என்ற படத் துவக்க விழாவில், தயாரிப்பாளர் இரா. பச்சமுத்து, அரசவைக் கவிஞர் முத்துலிங்கம், சைதை துரைசாமி எம். எல். ஏ., மு. கோ. வசந்தன், இயக்குநர் தாசப்பா ஆகியோர் கலந்து கொண்ட கண் கொள்ளாக் காட்சி!

சுஜாதா, சரத்பாபு, விஜய்பாபு, டெல்லி கணேஷ், நளினி காந்த், பிரமீளா, நர்மதா மனோஜ், ரமணி ஜெகதீஷ், பேபி சாரா ஆகியோர் நடிக்கும்; ''ஒரு ஜீவன் ஒரு காவியம்'' படப்பிடிப்பு விழா நடைபெற்றது.

ஒப்பனைக் கலைஞர்களுக்கு சங்கம் உருவாக்கிய தலைவர்!

— நாஞ்சில் அப்பு



மனிதனை கடவுளாக்கிக் காட்டும் அற்புதக் கலைஞர்கள் திரைப்பட ஒப்பனைக் கலைஞர்கள்.

இன்று 650 உறுப்பினர்களைக் கொண்டு ஆல் போல் வளர்ந்து நிற்கும் ''தென் இந்திய திரைப்பட ஒப்பனைக் கலைஞர்கள் சங்கம்'' கண்ணீரில் வளர்ந்த மரம்.

20 ஆண்டுகளுக்கு முன் கண்ணீரோடு தொடங்கப்பட்ட இந்தச் சங்கத்தைப் பற்றி கண் கலங்கக் கூறினார் சங்கத்தின் தலைவர் நாஞ்சில் அப்பு.

1967-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22-ம் தேதி தொடங்கப்பட்டது. இன்றைய திரைப்படக் கலைஞர்களுக்கு பல்வேறு உரிமைகளைப் பெற்றுத் தரும் சக நடிகர்கள் சங்கம், தென் இந்திய நடிகர்கள் சங்கம், ஸ்டண்ட் யூனியன் போன்ற அமைப்புக்கள் உருவாகக் காரணமாக இருந்த கலைத்தாயின் முதல் மகன் புரட்சித் தலைவரே 'தென் இந்திய திரைப்பட ஒப்பனைக் கலைஞர்கள் சங்கம்' தொடங்கவும் காரணமாக இருந்தார்.

1967-ம் ஆண்டு. குண்டடி பட்ட புரட்சித் தலைவர் குணம் பெற்று அரச கட்டளை படப்பிடிப்பில் முதன் முதலாகக் கலந்து கொண்டார்.

சத்யா ஸ்டுடியோவில் படப்பிடிப்பு நடந்து கொண்டிருந்தது. அப்போது திருவல்லிக்கேணியிலிருந்து ஒருவர் வந்து ''ஒப்பனைக் கலைஞர் ஒருவர் அனாதையாக இறந்து கிடப்பதாகவும், வந்து பார்க்குமாறும்'' கேட்டுக் கொண்டார்.

அண்ணன் ஜெயராமன் அவர்கள் என்னை அழைத்து சத்யா ஸ்டுடியோ கார்பெண்டர் சொக்கலிங்கத்தின் ஷைசக்

கிளை வாங்கிக் கொடுத்து பார்த்து விட்டு வருமாறு கூறினார்.

நான் சைக்கிளில் சென்றேன் திருவல்லிக்கேணி காவல் நிலையம் அருகில் பூட்டிக் கிடந்த பூக்கடை ஓரத்தில் 4 முழம் வேஷ்டி கட்டிய ஒருவர் இறந்து கிடந்தார்.

ஆள் யார் என்பது எனக்குத் தெரியாது. எதிரிலிருந்த டீக் கடைக்காரரிடம் விசாரித்தேன்.

அடிக்கடி தனது கடைக்கு டீ குடிக்க வருவதாகவும்; வழக்கம் போல் டீ குடிக்க வந்தவர் நெஞ்சு வலிப்பதாகக் கூறி படுத்ததாகவும் சிறிது நேரத்தில் உயிர் பிரிந்து விட்டது என்றும் சொன்னார்.

கிடந்த அந்த அற்புத ஒப்பனைக் கலைஞனைப் பார்த்து கண் கலங்கினார்.

மகாவீரபீமன் என்ற படத்தை எடுத்த எம். எல். பதியின் மேக்கப் மேன் அவர் என்பது அண்ணன் ஜெயராமன் சொல்லித்தான் எனக்குத் தெரியும்.

நெஞ்சில் துயரத்தோடும், கண்களில் நீரோடும் அனாதைப் பிணமான அந்த அற்புதக் கலைஞனை அடக்கம் செய்ய எல்லா ஏற்பாடுகளையும் செய்தோம்.

நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த 'காங்கேயன்' என்கிற கை வண்டிக்காரனின் வண்டியில் பிணத்தை ஏற்றிக் கொண்டு சுடுகாட்டுக்குச் சென்றோம்.

என்னிடம் 7 ரூபாய் மட்டுமே இருந்தது. டீக்கடைக்காரரிடம் ரூ. 6-50 கடன் வாங்கி காடா துணி ஒன்றை வாங்கிப் பிணமாகிவிட்ட அந்த மனிதன் மேல் போர்த்திவிட்டு வந்தேன்.

இந்த விவரங்களையெல்லாம் [சத்யா ஸ்டுடியோவுக்கு வந்து அண்ணன் ஜெயராமனிடம் தெரிவித்தேன். அவர் தகவலை புரட்சித் தலைவரிடம் கூறினார்.

கேளாமல் கொடுக்கும் வள்ளல் புரட்சித் தலைவர். உடனே தனது உதவியாளர் அண்ணன் சபாபதியை அழைத்து பணம் கொடுக்கச் சொன்னார்.

சபாபதி ஒரு கட்டு ரூபாய் நோட்டுக்களைக் கொடுத்தார். அது எவ்வளவு என்று கூடத் தெரியாது.

மறுபடியும் அண்ணன் ஜெயராமனை புரட்சித் தலைவர் அழைத்து ''இறந்தது யாராக இருந்தாலும் சரி, நல்லபடியாக அடக்கம் செய்துவிட்டு வாருங்கள்'' என்றார்.

அண்ணன் ஜெயராமன் என்னையும் செல்வராஜனையும் அழைத்துக் கொண்டு பிணம் கிடந்த இடத்துக்குச் சென்றார்.

அனாதையாகச் செத்துக்

பிணத்தை எடுப்பதற்கு முன்னால் குளிப்பாட்டக் கூட வசதி இல்லை. எந்தச் சடங்கையும் செய்ய எங்களால் இயலவில்லை.

மாரியப்பன் என்கிற இடுகாட்டுத் தொழிலாளியின் உதவியோடு இடுகாட்டில் செய்ய வேண்டிய இறுதிச் சடங்குகளைச் செய்து பிணத்தை அடக்கம் செய்தோம்.

இரவு 8-15 மணிக்கு மேல் அந்த மாபெரும் கலைஞனை மண்ணிலே புதைத்துவிட்டு வடபழனி கிங்ஸ் ஓட்டலில் டீ சாப்பிட்டோம்.

அன்று அந்த ஓட்டலிலேயே கண்ணீருக்கிடையே தோன்றியதுதான் சங்கம் அமைக்க வேண்டும் என்கிற எண்ணம்.

மறுநாள் அண்ணன் ஜெயராமன் செயல்படத் தொடங்கினார். 40 பக்கம் நோட்டு ஒன்றை என்னிடம் கொடுத்து ஒப்பனைக் கலைஞர்கள் அத்துணை பேரிடமும் கையெழுத்து வாங்கிக் கொண்டு ஆளுக்கு மூன்று ரூபாய் பணமும் வாங்கிவரச் சொன்னார்.

அதிலிருந்து மூன்றாவது நாள் சத்யா ஸ்டுடியோவில் மீண்டும் அரச கட்டளை படப்பிடிப்பு நடந்தது.

''ஆடிவா...ஆடிவா ஆடப் பிறந்தவளே ஆடிவா'' என்ற பாடலுக்கான படப்பிடிப்பில் புரட்சித் தலைவர் கலந்து கொண்டார்.

சங்கம் ஆரம்பிக்கிற விவரத்தைத் தெரிந்துகொண்ட புரட்சித் தலைவர் முயற்சியைப் பாராட்டினார்.

அண்ணன் ஜெயராமனையும் என். ராஜேந்திரனையும் முத்துவையும் அழைத்து ''சங்கம் ஆரம்பிக்கப் போவதாக கேள்விப்பட்டேன். மகிழ்ச்சி. எதிர்காலத்தில் அது உங்களைப் பாதுகாக்கும். செலவை நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்று கூறி எங்களுக்கு ஊக்கம் கொடுத்தவர் 'எங்கள் குலதெய்வம்' புரட்சித் தலைவர்.

புரட்சித் தலைவரின் ஆசியோடு அவரது துணையோடு தோன்றிய சங்கம் இன்று அனைத்து மொழிகளையும் பேசும் 700 உறுப்பினர்களைக் கொண்டு விசுவரூபம் எடுத்து நிற்கிறது.

கண்ணீருக்கிடையே தொடங்கப்பட்ட 'தென் இந்திய ஒப்பனைக் கலைஞர்கள் சங்கத்துக்கு வயது 20 ஆன போதிலும் எங்கள் கண்ணீர் இன்னமும் துடைக்கப்படவில்லை. எங்கள் துயரங்கள் இன்னும் தீர்ந்தபாடில்லை என்கிறார் அதன் தலைவர் அப்பு.



'பூந்தோட்டக் காவல்காரன்' - ஆரம்ப விழா... இளையராஜா, விஜயகாந்த்.

கமல் 'நாயகன்' விருது வாங்குவாரா?



''இந்த ஆண்டின் சிறந்த நடிகருக்கான தேசிய விருது கமலுக்குத்தான் கிடைக்கப் போகிறது''—

இப்படிக் கூறுபவர்கள் ஒன்றிரண்டு பேர்களோ, அல்லது கமலின் ரசிகர்கள் மட்டுமோ அல்ல. ''நாயகன்'' திரைப் படத்தைப் பார்த்த அத்தனை பேரும் கூறுகின்றனர். இதில் பிரபல திரைப்பட நடிகர், நடிகைகள், தயாரிப்பாளர்கள், டைரக்டர்களும் உண்டு.

ஆனால், எல்லோருடைய எண்ணத்தையும் பூர்த்தி செய்வதுபோல் இந்த ஆண்டிற்கான தேசிய விருது கமலுக்கு கிடைக்குமா?

சிறந்த நடிகரின் பெயரை தேர்வுக்குழு அறிவிக்கும் வரையில், இது கேள்விக்குறியாகத்தான் நிலைத்திருக்கும்.

காரணம், அரசியல் பின்னணியைவிட, வேறு ஒரு நடிகர் கமலைவிட, சிறப்பாக நடித்துள்ளார் என்பதையும் விட அவரின் குடும்பமேயாகும், உங்களுக்கு இந்த விஷயம் புதிராக இருந்தால் கடந்த இரண்டு வருடமும் விருதுகள் யாருக்குக் கிடைத்துள்ளன என்று பாருங்கள்.

சென்ற ஆண்டு கமலின் அண்ணன் சாருஹாசனுக்கும், அதற்கு முந்தைய ஆண்டு அவரது மகள் சுஹாசினிக்கும் விருது கிடைத்ததை அதற்குள் யாரும் மறந்திருக்க முடியாது.

இந்த நிலையில், இந்த ஆண்டும் அதே குடும்பத்தைச் சேர்ந்த கமலுக்கு விருதினை அறிவிக்கும் பொழுது, தேர்வுக் குழுவினரின் மேல் பாய இருக்கும் கேள்விக் கணைகளை யாராலும் தடுத்திட முடியாது

குறிப்பாக, இந்த தேசத்தில் விருதுக்கு சொந்தக்காரர் அந்த ஒரு குடும்பத்தினர் மட்டும் தானா? இந்த ஒரு ஆண்டு அவர்கள் குடும்பத்திற்கு விருது கொடுக்கா விட்டால் இந்திய திரைப்பட உலகம் அழிந்தா விடும்? என்பது போன்ற சர்வ சாதாரணமான கேள்விகள் நிச்சயமாக எழும்பவே செய்யும்.

இது, தேசிய அளவில் மற்ற எல்லா நடிகர்களையும் விட சிறப்பான முறையில் கமல் நடித்திருந்து, தகுதியின் அடிப்படையில் அவருக்குப் பரிசு கிடைக்கக் கூடிய நிலை ஏற்பட்டாலும், எழும்பக் கூடிய கேள்விகள் சாதாரண விஷயமே.

எல்லாவற்றிலும் அரசியல் இருப்பது போல் தேசிய திரைப் படத் தேர்வுக் குழுவிலும் அரசியல் இருப்பதை எவராலும் மறுத்திட முடியாது. என்றாலும் இந்த ஆண்டு திறமையின் அடிப்படையில் கமலுக்கு விருதினைக் கொடுப்பார்களா? அல்லது தங்களின் பெயரில் பாய இருக்கும் கேள்விக் கணைகளுக்கு பயந்துகொண்டு மத்திய அரசின் அரசியல் சாயம் பூசிக் கொண்ட வேறு யாருக்காவது நிர்ப்பந்தத்தின் பேரில் விருதினை வழங்குவார்களா? என்பது அவர்கள் அறிவிக்கும் அறிவிப்பிலிருந்துதான் தெரிந்து கொள்ள முடியும்.

—எம். சுகுமாரன்



-புரட்சித்தலைவர், பாரதிராஜா, பிரேம்நசீர்-

பாடல்களை கற்பழிக்கும் இசை அமைப்பாளர்கள்!

கொள்வதற்காக கடுமையான பயிற்சிகள் செய்து வருகிறேன், வருடங்கள் ஏற ஏற பாடகர்களின் குரலில் அபசுவரம் தோன்ற ஆரம்பித்து விடுகிறது, ஆனால் என்னைப் பொறுத்தவரை என்குரலை நான் பாதுகாத்து வருகிறேன். குளிர்ச்சியான பொருள்களைக் கூட நான் தொடுவதில்லை, குரலை ஒரே சீராக வைத்துக் அதே நேரத்தில் பாடல்களின் தரம் தாழ்ந்து அது கற்பிழந்து காணப்படுவதற்கு முக்கிய காரணம் இன்றைய இசையமைப்பாளர்கள்தான்.

'காலையும் நீயே, மாலையும் நீயே' பிரபு, லட்சுமி, விஜயகாந்த்.

இப்படி கூறியவர் யார் என்று கேட்கிறீர்களா?

இந்தியில் கொடி கட்டிப் பறந்து வரும் லதா மங்கேஷ்கர் தான்.

முன்பு இருந்ததைப் போல் இவருக்கு வாய்ப்புகள் இல்லை என்ற நிலை இப்பொழுது நிலவி வருகிறது, பாடியது போதும் இனிமேல் ஓய்வு தேவை என்ற முடிவுக்கு அவர் வந்து விட்டாரோ என்று நினைக்கத் தோன்றும் அளவிற்கு அவரின் நடவடிக்கைகள் மாறி வருகிறது, இது குறித்து அவரிடம் கேட்ட போது...

—என்னை வாழ வைப்பது சங்கீதம்தான், எனவேதான் நான் சிறந்த பாடகியானேன். அதற்காக ஒரு இயந்திர மனிதனைப் போல் என்னால் பாடிட முடியாது. ஒவ்வொரு நாளும் ஆரேழு பாடல்கள் பாடவேண்டிய கட்டாயம் ஏற்படும் போது பாடல்களின் புனிதத்தன்மை சீர்குலைந்து விடுகிறது.

எனவேதான் எனக்கு வரும் வாய்ப்புகளை நானாகவே குறைத்துக் கொண்டு வருகிறேன். அதே நேரத்தில் கடவுள் எனக்கு வாழ்வதற்கு அனுமதி தரும்வரை பாடிக் கொண்டே இருப்பேன்.''

புதிய இசை அமைப்பாளர்களைப் பற்றி கேட்டபோது...

'முன்பு இருந்த இசைமேதைகளைப் போல் இப்பொழுது ஒருவர்கூட இல்லை' என்றார்.

இவரைப் பற்றி கின்னஸ் புத்தகத்தில் எழுதியுள்ளதைப் பார்ப்போமா?

வருடத்தில் ஆயிரம் பாடல்கள், இருபத்தியாறு ஆண்டுகளில் இருபத்தைந்தாயிரம் பாடல்கள், பாடி இருப்பதாக கூறுகிறது.

—கலைஞானி.

அம்பிகா-ராதா பட பூஜையில்... புரட்சித்தலைவரின் கடைசி கலை நிகழ்ச்சி.

'அமெச்சூர் நாடக விழா' போட்டி!

தென்னிந்திய நடிகர் சங்கம் அமெச்சூர் தமிழ் நாடக விழாப் போட்டி ஒன்றை நடத்த ஏற்பாடு செய்துள்ளதாக, நடிகர் சங்கத் தலைவர் ராதாரவியும், செயலாளர் ஆர். எஸ். மனோகரும் அறிவித்துள்ளார்கள்.

அந்த விழா 1988-ஆம் ஆண்டு மார்ச் 15 முதல் 30-ஆம் நாள்வரை நடைபெறும். அமெச்சூர் தமிழ் நாடகக் குழுக்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பாக அமைந்துள்ளது.

நாடக விழாப் போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் அமெச்சூர் குழுக்கள், அதற்கான விண்ணப்ப மனுவை நடிகர் சங்கத்தில் நேரிலோ அல்லது அஞ்சல் மூலமாகவோ பத்து ரூபாய் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யப்பட்டு 20-1-1988ஆம் நாளுக்குள், கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிவிட வேண்டும்.

முகவரி: 'அமெச்சூர் நாடகப் போட்டி', தென்னிந்திய நடிகர் சங்கம், 153, அபிபுல்லா சாலை, சென்னை-600017.

'தம்பி தங்கக் கம்பி' விஜயகாந்த், லட்சுமி.

சிரித்த முகத்துடன் புரட்சித்தலைவர், பாரதிராஜா.

தேசிய விருது பெற்ற ஏவி.எம்.சரவணனுடன் புரட்சித் தலைவர்.



—8-ம் பக்கத் தொடர்ச்சி—

கழக நட்சத்திரங்கள், மங்க வேண்டிய நேரத்தில், மங்கி ஒளிர வேண்டிய இடத்தில் ஒளிர்ந்தார்கள்! கட்சி ஒளி படர்ந்த வானமாகப் பளபளத்தது!

தொண்டர்கள் வாழ்க்கையிலே வறுமைப் புயல் வீசியது!

இரத்தம் சிந்தினார்கள் தொண்டர்கள்! கொலைக் காளானார்கள்! வசதியாகிவிட்ட அரசியல் காழ்ப்பாளர்களால் பழி வாங்கப்பட்டார்கள்.

புரட்சித் தலைவருடைய துவக்க கால ஆட்சி மக்களிடம் நாணயத்தை, சீரான வாழ்க்கையை, நேர்மையை உருவாக்கியது.

இதனை மத்திய ஆட்சி கண்டது! திடீர் டிஸ்மிஸ் என்றது! கமிஷன் படையெடுப்பு நடத்தியது!

ஆட்சியைப் புரட்சித் தலைவர் ஏற்று ஆண்டிரண்டரை கூட ஆகவில்லை! அதற்குள்ளேயே இந்த அரசியல் ஆர்ப்பாட்டம் ஆரவாரமிட்டது.

புரட்சித் தலைவர் மனம் சூரியனாகவில்லை! சந்திரனாகவே நடமாடியது—அரசியல் வானில்!

வானத்தை நோக்கினார்! அண்ணாவின் ஒளி தோன்றவில்லை! இருண்ட வானமே தென்பட்டது!

நிமிர்ந்த குன்று போன்ற மக்கள், மத்திய ஆட்சிப் போக்கைக் கண்டு நிலை குலைந்தார்கள்!



புரட்சித் தலைவரின் இறுதிப் புகழ்ப் பயணம்!

அசையா குன்றுகளல்ல நாங்கள்! சமயம் வந்தால் அசைவோம் என்று அணியணியாகத் திரண்டனர்-புரட்சித் தலைவரை நோக்கி!

நீரூற்று, தண்ணீரைச் சுரக்க வைப்பது மாதிரி, தீமைகள் அடுக்கடுக்காகச் சுரந்தன மத்திய அரசிடமிருந்து!

காரணம், சூரியஒளி சந்திரனிடம் ஊடுருவாதா? சந்திரக் கட்டளை பிறவாதா! என்ற ஏக்கம் எதிரொலித்தது!

பொன்மனச் செம்மலின் மன துருத்தியை மக்கள் தைரியமென்ற காற்றால் ஊதி ஊதி, மீண்டும் தேர்தலிலே ஈடுபடுங்கள் என்று கூறி இரும்பிதயத்தை உருகவைத்தார்கள்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக விண்மீன்கள் அவியாமல், சுருங்கி விரியும் அனற்சுடராய் மினுமினுத்துத் தேர்தல் பணிக்கு ஒளியூட்டின!

மனையாள் மகிழ்ச்சி ஒளிகளை மறந்தார்கள்! புளகாங்கிதப் பூரிப்புகளையும் புறக்கணித்தார்கள்.

தேர்தல் நாள் வந்தது. தமிழகம் தடந்தோள் தட்டித் தயாரானது!

போர்க்களத்தில் பாய்ந்தோடும் குதிரைகளைப் போல, அவரவர் தனித்தனி வழியோடி, புரட்சித் தலைவரை அரியாசனத்தில் அமர்த்திட அரும்பாடு பட்டார்கள்.

பத்திரிகைக்காரர்களது கள்ளப்பேனா, பொய்யை மையாக்கி எழுதியது!

வானத்துப் பறவைகளைப் போல அ.தி.மு.க. வினர் பறந்தோடி, மத்திய அரசு கொடுமைகளைச் சிறகடித்துக் கூவிக் காட்டி ஓட்டுக் கேட்டனர்!

நாவாகிய வில்லை வளைத்த தி.மு.க., தில்லுமுல்லுகளைப் பிரச்சாரமாக்கியது - ஆட்சிப் பலத்துடன், மத்திய அரசும் அதற்குப் பங்காளியானது.

என்ன தப்பு செய்தேன் நான்? ஏன் டிஸ்மிஸ் செய்தார்கள்? ஒரு தவறும் புரியாத என் ஆட்சியைக் கவிழ்த்தது ஜனநாயகம்தானா'' என்று கேட்டார் புரட்சித்தலைவர்!

நெருப்புக்கு முன்னே போகும் புகை போல, புரட்சித் தலைவருக்கு முன்னே ஊர் தோறும் சென்று தி.மு.க. வினர் புறம் பேசினார்கள்!

செத்த காக்கையைப் பார்த்து சாகப்போகும் காக்கைகள் ஒப்பாரி வைத்து கரைதலைப் போல, எதிர்க்கட்சிகள் எல்லாம் கரைந்தன!

தேர்தல் முடிவு! பிரசவித்த பின்பு காவானில் கண்ட குழந்தையைப் பார்க்கும் தாய் போல, தமிழகமே மகிழ்ந்து மிதந்தது!

வெற்றி எக்காளம் தமிழகமெங்கும் முரசு கொட்டியது.

எந்த இந்திரா காந்தி, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவையைப் பறித்தார்களோ, அதே இந்திராவே வெட்கப்படும்படி மீண்டும் முதல்வரானார் புரட்சித் தலைவர்!

தோற்றக் கட்சிகள் எல்லாம் தோலுரிக்கப்பட்ட ஆடுகளைப் போலத் தொங்கின!

குருவி பிடிப்பவன் பதுங்கிப் பதுங்கிப் போவதைப் போலவே அவர்கள் வாழ்ந்தார்கள்!

அதற்குப் பிறகு அருமையான திட்டங்கள் புரட்சித் தலைவர் ஆட்சியில் உதயமாயின! அதனால் ஏழைகள் ஏற்றம் பெற்றனர்!

சத்துணவுத் திட்டம், பால்வாடி, சீருடைகள், செருப்பு, பற்பொடி, இலவசப் புத்தகங்கள், இலவசக் கல்வி ஆகியவை, குழந்தைகள் திட்டமாகத் தோன்றி நடை முறைக்கு வந்தன.

அதைக்கூட அழுக்காறுகள் ஏசின! அரற்றின! முணுமுணுத்தன! குறை வாயால் குரைத்தன!

அரசு ஊழியர் இறந்தால் மரணவூதியம்! ஓய்வூதியம்! குடும்ப ஊதியம் ஏற்றம் பெற்றன - அவரவர் கேட்டதற்கேற்ப!

ஆசிரியர் பெருமக்கள் அரசு ஊழியராக அங்கீகாரம்!

பெண்கள் பல்கலைக்கழகம், மருத்துவப் பல்கலைக் கழகம், கவிஞர்கள் பெயரால் பல்கலைக் கழகங்கள் தோன்றின!

மக்கள் தொண்டுக்கும் நாட்டுக்கும் உழைத்த தியாகிகள் பெயரில், பல மாவட்டங்கள் உருவாயின.

இதற்கிடையே புரட்சித் தலைவர் உடல் நலன் பாதிப்புப் போராட்டம்! மருத்துவப் போராட்டம்! அமெரிக்கா சென்றார் சிகிச்சைக்காக!

தமிழக சட்டமன்றத் தேர்தலும் வந்தது. அரசியல் நிலப்பரப்பில் களையாய் போன செடி கலைஞர்!

அதிரடி, அந்தரடி, திரிசங்கு சொர்க்க வித்தைகள் போன்ற தேர்தல் பிரச்சாரங்களைத் திட்டமிட்டுச் செய்தார்.

முடிவு! இந்தத் தேர்தலிலும் தோல்வி! கலைஞர் தலை மட்டமானார். அவரது கட்சி அவமானப்பட்டு புரண்டு கொண்டிருந்தது!

தண்ணீரருகே நின்ற மரம், கால்வாய் அருகே தனது வேர்களைப் பதிய வைப்பது போல, பசுமையாக - நலமாக புரட்சித் தலைவர் தாயகம் திரும்பினார்.

மூன்றாவது முறையும் முதலமைச்சரானார் - முப்பிறவி கண்ட புரட்சித் தலைவர்!

மழை வந்தாலும் வராவிட்டாலும் மதுரமான கனிகளை நாட்டுக்கு நல்கும் பழமரமாகப் புரட்சித் தலைவர் ஆட்சி நடத்தினார்!

அண்ணாவின் இதயக்கனி, தனது ஆட்சி மூலம் அருஞ்சுவைக் கனிகளைப் பல திட்டங்கள் மூலமாக வழங்கினார்!

கடையேழு வள்ளல்களையும், இடையேழு வள்ளல்களையும் இறுதியிலே நிறுத்தி, வள்ளலுக்கும் வள்ளலானார் புரட்சித் தலைவர்!

டிசம்பர் 24, 1987 அன்று விடிந்த காலை, புலராத காலைபோல இருள் சூழ்ந்தது.

புரட்சித் தலைவர் மாரடைப்பால் மரணமானார் என்ற செய்தி காட்டுத் தீ போல நாடெங்கும் பரவியது.



சிவாஜி, கமல் நடித்த படங்கள் வெளிநாடுகள் செல்கின்றன!

நடிகர் திலகம் சிவாஜியும், 'சத்யராஜும் நடித்த முத்துக்கள் மூன்று' என்ற தமிழ்ப் படமும், நடிகர் தியாகராஜன் நடித்த மலையூர் மம்மட்டியான் என்ற படமும் மலேசியா சிங்கப்பூர் நாடுகளுக்குச் செல்கின்றன.

டைரக்டர் பாலச்சந்தரின் 'மனதில் உறுதி வேண்டும்' என்ற தமிழ்ப் படம் தூரக் கிழக்கு நாடுகளுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளது.

'மகா சக்தி மாரியம்மன்' என்ற தமிழ்ப் படம் மொரிஷியஸ் நாட்டுக்குப் போகின்றது.

நடிகர் பிரபுவும் நர்மதாவும் நடித்த 'சின்னப் பூவே மெல்லப் பேசு' என்ற தமிழ்ப் படம் இலங்கைக்குச் சென்று தமிழர்களிடையே பேசவிருக்கின்றது.

கமலஹாசன் சரண்யா நடித்த 'நாயகன்' என்ற தமிழ்படம் அரேபிய நாடுகளுக்குச் செல்ல அனுமதி கொடுக்கப்பட்டிருக்கின்றது.

அதே போன்று மலையாளப் படங்களும், இந்திப் படமும் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளது.

பல்கேரிய நாட்டில் குழந்தைகள் படவிழா!

மக்கள் குடியரசு நாடான பல்கேரியாவில் ஜூலை 13-ந் தேதிமுதல் 22-ம் நாள்வரை. குழந்தைகள், சிறுவர்கள் பட விழா நடைபெறவிருக்கிறது.

இது, அனைத்து நாடுகளின் சார்பாக நடத்தப்படும் முதல் படவிழா என்பது குறிப்பிடத் தக்கதாகும். இந்த விழாவிற்கு ''சோஃபியா-88'' என்ற பெயரிடப்பட்டுள்ளது. அந்த நாட்டு தேசிய பண்பாட்டு அரண்மனையில் இவ்விழா நடைபெறும்.

திரையுலக சம்பந்தமான எல்லா வேலைகளைப் பற்றியும், அதன்தன் தகுதி தரம் பற்றியும், மற்ற நாடுகளில் சினிமா சம்பந்தப்பட்ட பணிகளை ஆற்றும் நிறுவனங்களின் தயாரிப்பு முறைகளைப் பற்றியும் ஆராயப்படுவதே இந்த விழாவின் நோக்கமும்-அவாவுமாகும்.

விழாவில் பங்கேற்க விரும்பும் பட நிறுவனங்கள் ஏப்ரல் 30-ந்தேதி 1988க்குள் மனுக்கள், மற்ற விபரங்களை அனுப்பிவைக்க வேண்டும்.

காவிரியின் ஆடிப் பெருக்கைப் போல மக்கள் நதிகளாக ஓடி வந்தனர்!

அலைகள் மோதியடிக்கும் நதிகளைப்போல, சீறிவரும் பாம்புப் படைகளைப் போல, கூச்சலோடும் குய்யோ முய்யோ என்ற ஒலியோடும் சென்னை நாடி ஓடி வந்தனர்!

நெற்போரடிக்க வந்த கடாரிகளைப் போலத் துள்ளி துள்ளி மக்கள் ஓடி வந்தார்கள்!

நோய் கடலில் புரட்சித் தலைவர் தத்தளித்போது நேயம் பாராட்டியவர்கள் எல்லாம், ஓயாமல் அழுது கொண்டே வீதி வீதியாக வலம் வந்தனர் சென்னையை!

போருக்கு அணிவகுக்கப்பட்ட படைபோல மக்கள் வந்ததைக் கண்டு, ராணுவமும் போலீசும் அதிர்ச்சியடைந்தன! அதனாலே பல அநாகரிகங்கள் அரங்கேறின!

ஒன்றையொன்று நெருங்காமல் தத்தம் பாதையிலே உலகை இயக்கும் கோள்களைப் போல, சோகமே உருவாக வந்த மக்கள், அவரவர் மனவேதனையுடனும் ஆற்றொணா கண்ணீருடனும் தலைவர் பிணத்தைப் பார்ப்பதே தத்தம் பாதையென்று இரவு பகலாக இயங்கி வந்தனர்!

புரட்சித் தலைவர் உடல் இறுதி ஊர்வலம் புறப்பட்டதைக் கண்டு வானமும் பூமியும் அதிர்ந்தது!

புரட்சித் தலைவர் சோகக் காவியத்தை வருணனை செய்ய வந்த தற்புகழ் விரும்பி, தனக்கும் காளான் புகழைச் சேர்த்துக் கொண்டார்!

எரிகின்ற புகழிலே பிடுங்கியவரை லாபம் என்ற கணக்கர் அவர்!

மன்னாதி மன்னவரே! புரட்சித் தலைவரே! அண்ணா உருவம் பொறித்த கொடியை படுக்கையாக்கிக் கொண்ட அண்ணா திராவிட முன்னேற்றக் கழக வழி காட்டியே!

தேடிவந்த தேசியக் கொடியைப் போர்த்திக் கொண்டு சந்தனப் பெட்டியிலே உறங்கும் எம் சந்ததியே!

வாயடித்து மாரடித்து அழுத தாய்மார்கள், அய்யோ தலைவா என்று அழுத கண்கள், உன்னைப் பார்க்க வந்த உத்தமர் பிணமான சோகங்கள், அடடா! எப்படித் தலைவா மறப்போம் உம்மை!

தாலியைக் கூட மறந்து விடலாம் திருமணப் பெண்! நகையாசையைக் கூட நங்கை ஒருத்தி மறந்து விடலாம்! நாங்கள் எப்படி மறப்போம் புதியபூமியின் சிற்பியை!

புரட்சித் தலைவா! நீர் கொண்ட துயிலில் வஞ்சனைக்காரர்கள் வசனம் பேசலாம், கள்ள மனம் கொண்டவர் கவி பாடலாம், புறம்பேசிய புல்லறிவாளர்கள் புலம்பலாம், சிறுமைகள் பெருமை பெருக்கலாம், அவையெலாம், அவரவர் பெருமையை உன் பிணத்தின் மூலமாவது மிச்சம் சொச்சம் அற்பமாகப் பெற நினைப்பவர்களே!

மனிதனும் தெய்வமாகலாம் என்ற மாண்பின் இலக்கணமே! இலக்கியமே!

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து காட்டிய வானுறையும் தெய்வத்தின் அவதாரமே!

அறிஞர் அண்ணாவின் பாதச்சுவடு பிறழாமல் நடந்து காட்டிய அற்புத மனிதமே!

எம்.ஜி.ஆர். என்ற எழில் தேவனே! தமிழ்நாட்டு மக்களைத் தன்மானத்தோடு வாழ வழிகாட்டு!

மழை போல வா! உண்ணீர் வழங்கி எம் தாக வேட்கையை தணியய்யா!

காற்றாக வீசு; உயிர்க் காற்றாக எம் உடலிலே ஊடுருவு! இந்த உடலை நாறாமல் வாழவை!

இளவேனிலாக இரு! எம் எண்ணங்கட்கு இதமான சூடாக இருந்து சராசரி வாழ்வுக்குரிய தட்ப, வெப்பமாக நின்றுதவு!

கோடையாகச் சுடு! கொள்கை தவறினால் — குற்றம் புரிந்தால் — குணக்கேடராக மாறினால்! சுடு! சுட்டுச் சாம்பலாக்கு!

நெருப்பாக வா! உன் புகழைக் கொல்கின்ற நன்றி கெட்ட ஜென்மங்களை எரி! எரி!

எம்.ஜி.ஆர். என்ற மூன்றெழுத்தே, அண்ணா என்ற மூன்றெழுத்தின் பின் சந்ததியே!

சந்தனப் பெட்டியிலே உறங்கும் எங்கள் தமிழ்ச் சந்ததியே! உங்களுடைய ஆத்மா சாந்தியடைய வாழ்த்துகிறோம்! வணங்குகிறோம்!

என்.வி.கலைமணி

சிங்கப்பூரில் கவர்ச்சியாட்ட நடன நிகழ்ச்சிக்காக அனுஜா சென்றார்!

அவசரத்தில் பேண்ட் ஜிப்பைப் போட மறந்து விட்டு யாராவது ரோட்டில் போய் விட்டால் அதைக்கண்டுபிடித்த இடத்திலேயே நிற்க வைத்து தண்டித்து, 50 சிங்கப்பூர் டாலர்களை வசூல் செய்து விடுவார்கள் சிங்கப்பூர் போலீசார்!

அனுஜா அங்கே போய் பிறந்த மேனி நடனம் ஆடினால் விடுவார்களா சிங்கப்பூர் போலீஸ் அதிகாரிகள்? அனுஜாவைப் பிடித்து சிறையிலே தள்ளி விட்டார்களாம்! பாவம்!

இந்த செய்தி அறிந்த டைரக்டர் எஸ்' பி. முத்துராமன் உறவினர் ஒருவர், லாக்அப்பில் கண்ணீர் விட்டுக் கொண்டிருந்த அனுஜாவை விடுவித்தாராம்.

—'வண்ணத் திரை'
11-12-87

விஜயகாந்த் நடிக்கும் மூங்கில் கோட்டை!

ஆபாவாணனின் அற்புதத் தயாரிப்பு!

ஊமை விழிகள், உழவன் மகன் போன்ற தமிழ்ப் படங்களைத் தயாரித்துப் புகழ் பெற்ற ஆபாவாணன், ஆங்கிலப் படம் போல மற்றொரு தமிழ்ப் படத்தை அற்புதமாகத் தயாரித்திட திட்டமிட்டுள்ளார்!

அதன் எதிரொலிதான், ஆபாவாணனின், ''மூங்கில் கோட்டை'' என்ற தமிழ்த் திரைக்காவியம்!

'மூங்கில் கோட்டை' படத்தின் மூலம் ஆபாவாணன் என்ன புதுமையைச் செய்கிறார்?

திரைச் சிற்பி படநிறுவனத்தார், 'ஊமை விழிகள்' என்ற படத்தை எடுத்து வெளியிட்டார்கள் அல்லவா?

அந்த ஊமைவிழிகள் படத்தின் இரண்டாவது பாகமாக உருவெடுப்பதுதான் 'மூங்கில் கோட்டை' என்ற படம்!

ஆங்கிலப் படங்கள் உருவாவது போலவே, 'மூங்கில் கோட்டை' படமும் ஓர் தொடர் சித்திரமாக அமைத்துள்ளதே, ஆபாவாணன் செய்துள்ள புதுமையாகும்.

'கல்யான ராமன்' என்று முதல் பாகமாக வெளிவந்த தமிழ்ப் படத்தின் தொடர்ச்சியாகவே, 'ஜப்பானில் கல்யாண ராமன்' என்ற படமும் வெளிவந்ததை அறிவோம்! படத்தில் முதல் பாகத்தின் தொடர்பிருந்ததா இல்லையா என்று சிந்திக்கக் கூடாது; தொடர் என்று மட்டும் கூறிக் கொள்வோமாக!

ஆபாவாணன் அவ்வாறு செய்யாமல், ஆங்கிலப் படங்கள் உருவாக்கப்படுவதைப் போல, 'ஊமை விழிகள்' படத்தின் இறுதிக் கட்டத்தில் வாழ்ந்த கதாபாத்திரங்களை அப்படியே வைத்து, அவர்கட்கும் வாழ்வு தந்து, அதே நடிகர்களையே அந்தந்தப் பாத்திரங்கட்கேற்ற பண்புகளோடு நடிக்க வைக்கின்ற புதுமையே, ஆபாவாணன் செய்கின்ற புதுமையாகும்.

'ஊமை விழிகள்', படத்தில் டி. எஸ். தீனதயாளாக நடித்த விஜய காந்தே, 'மூங்கில் கோட்டை' படத்தில் பதவி உயர்வு பெற்ற எஸ். பி. தீனதயாளாக நடிக்கின்றார்!

நடிகர்கள் கார்த்திக், ஜெய்சங்கர், அருண்பாண்டியன், நாசர் ஆகியோர் நடிக்கின்றார்கள்.

நடிகைகள் சசிகலா, ஸ்ரீ வித்யா, கோகிலா ஆகியோரும் நடிக்க ஏற்பாடாகியுள்ளனர்.

நடிகர் நாசர், மூங்கில் கோட்டையில் புதியதோர் பாத்திரத்திலே தோன்றப் போகின்றார்!

இந்தப்படம் சினிமாஸ் கோப்பில் உருவாக்கப் படுகின்றது. அதற்காக அமைக்கப்படும் வெளிப்புறக் காட்சிகளே படத்தின் வெற்றிக்குப் பாலமாக அமையுமாம்.

காஷ்மீர், நேபாளம், போன்ற மலைப் பகுதிகளின் ஈடிணையிலா இயற்கைக் காட்சிகளையும், கோவா, கேரளா கடற்கரைகளின் அற்புதமான காட்சிகளையும் படமாக்கிடத் திட்டமிட்டுள்ளனராம்!

இந்தப் படத்திற்காக ஒன்பது பாடல்களையும் ஆபாவாணனே எழுதியுள்ளார். இந்த எல்லாப் பாடல்களும் லண்டனில் பதிவாகியுள்ளன.

ஒன்பது டிராக் ஸ்டீரியோ போனிக் ஒளிப்பதிவு முறைகளில், அந்தப் பாடல்களனைத்தையும் பதிவு செய்யத் திட்டமாம் ஆபாவாணனுக்கு!

வழக்கமாக கதை-வசனம், துணை-இசை ஆகிய கடமைகளை அவரேதானே செய்ய வேண்டும்! செய்கிறார்!!

ஆபாவாணனின் மற்றொரு துணிகரமான செயல் என்னவென்றால், திரைப்படக் கல்லூரியில் பயின்ற பட்டதாரியான ராஜா ரவி என்பவரை 'மூங்கில் கோட்டை' படத்தினை இயக்கும் பொறுப்பாளராக நியமித்துள்ளதேயாகும்.

அதோடு மட்டுமல்ல, ஒளிப்பதிவு செல்வகுமார், எடிட்டிங் அசோக் என்ற இருவரும் பட உலகிற்கே புதிய முகங்களாகும். அவர்களையும் ராஜாரவி என்ற புதுமுகத்தையும் சேர்த்து, மூன்று புதுமுகங்களைத் தனது படத்திலே புகுத்தியிருப்பதும் துணிகரமான புமைதானே!

Edited and Pubilshed by | A. Pitchaikannu, 20/4, Peters Colony, Royapettah, Madras-14, Phone: 812121
Printed by Sree Mahalakshmi Printing House, 10, | Pudupet Garden Street, Roya pettah, Madras-14.

வேண்டாம் என்று நினைத்தேன். பத்திரிகை மட்டும் தான் கொடுத்தேன்.

ஆனால் அவர் 55 நிமிடங்கள் இருந்து என் தங்கச்சி கல்யாணத்தை சிறப்பாக நடத்தி வைத்தார்.

அவரைப்பற்றி நான் சொல்ல வேண்டுமானால் எல்லா மனிதர்களிடமும் இருக்கிற நல்லவைகளையெல்லாம் சுவீகரித்துக் கொண்டு தனித்து விளங்கும் ஒப்பற்ற மனிதர் அவர்.

எம்.ஜி.ஆர். சிரிப்பதையும் நம்மோடு பேசுவதையும் தான் நிறுத்திக் கொண்டார்.

என்போன்ற கலைஞர்களுக்கு நிச்சயம் பெரிய இழப்பு, அவ்வளவு தான்.



ஜனகராஜ்

புரட்சித் தலைவர் கலை உலகத் தந்தை. அவர் இழப்பு ஈடுகட்ட முடியாத இழப்பு. அவர் உடல்தான் மறைந்திருக்கிறதே தவிர, மக்கள் உள்ளத்தை விட்டு அகல வில்லை. அவர் ஆத்மாவுக்கு என் வணக்கம்.

சீர்காழி கோவிந்தராஜன்

தமிழகம் ஓர் தன்னிகரற்ற தலைவரை, அன்பாளரை, பண்பாளரை, இசைக் கலை ரசிகரை இழந்து விட்டது.

அவர் விரும்பியபடி நான் கர்னாடக, சங்கீத, இசை நிகழ்ச்சிகளை மட்டுமே மக்களிடையே செய்ததால் என்னை 'அரசு கலைஞர்' ஆக்கினார். புரட்சித் தலைவர் இயற்கையிலே சங்கீத ஞானம் நிரம்பியவர்' என்று சீர்காழி கோவிந்தராஜன் குறிப்பிட்டார்.



ஒய்.ஜி. மகேந்திரன்

எம்.ஜி.ஆர். தமிழ்நாட்டின் தவப்புதல்வன். இப்போது அவர் நம்மிடையே இல்லை.

காலச் சககரத்தை பின் நோக்கி சுழல விட்டால் எங்கள் குடும்பத்துக்கும் அவருக்கும் இடையே 35 ஆண்டுகால நட்பு உண்டு. அவர் இன்று இல்லை.

நான் அவரை ஒரு ஹீரோவாகப் பார்த்திருக்கிறேன், வீரனாக பார்த்திருக்கிறேன், ஏழை பங்காளனாக பார்த்திருக்கிறேன், தாய்க்கு மகனாக சகோதரிகளின் சகோதரனாகப் பார்த்திருக்கிறேன். முதலமைச்சராக பார்த்திருக்கிறேன்.

அவர் ஒய்வெடுத்து நான் பார்க்க வில்லை. உழைத்துக்கொண்டே இருப்பார். இப்படி ஒரு தலைவனால் உழைக்க முடியுமா என்று வியந்திருக்கிறேன்.

திடீரென அவருக்கு ஓய்வு எடுக்க வேண்டும் என்கிற எண்ணம் வந்ததோ என்னவோ அவர் ஒய்வெடுக்கச் சென்று விட்டார்.

அவர் எந்த பிரின்சிபிளுக்காக உழைத்தாரோ அதைத் தமிழ் மக்கள் எல்லோரும் ஒன்றுகூடி உழைத்து நிறைவேற்ற வேண்டுப்.

அவர் படத்திலே 'பனியில்லாத மார்கழியா?! படை இல்லாத மன்னவனா? என்று ஒரு பாடல் வரும். அந்தக் கவிஞன் இப்போது இருந்திருந்தால் அதை 'எம்.ஜி.ஆர். இல்லாத தமிழ் நாடா?, என்று மாத்தி பாடியிருப்பார்.

எம்,ஜி.ஆர். இல்லாத தமிழ் நாடா? என்பதை என்னால் நினைத்துக்கூடப் பார்க்க முடிய வில்லை.



இசையமைப்பாளர் சங்கர் கணேஷ்

இசையமைப்பாளர் (சங்கர்) கணேஷ் புரட்சித் தலைவர் மரணச் செய்தியைக் கேட்டதும் அதிர்ச்சியடைந்து, அவர் சடார் என்று அலறியபடியே தவறி விழுந்து விட்டார். ஏற்கனவே குண்டு வெடித்து கால் எலும்பு முறிந்த அதே இடத்தில் மீண்டும் பலத்த அடி ஏற்பட்டுள்ளது.

அப்படிப்பட்ட வேதனையோடு அவர் புரட்சித் தலைவர் காலமானதைப் பற்றிக் கூறுகையில் 'குண்டு வெடித்ததால் ஏற்பட்ட விபத்துக்குப் பிறகு நான் உயிரோடிருக்கிறேன் என்றால், அதற்குக் காரணம் புரட்சித் தலைவர் தான். அவர் தந்த உயிர்தான் என் உடலில் இருக்கிறது' என்று வேதனையோடு குறிப்பிட்டார்.

பி. சுசீலா

அவரது உடம்புக்கு சுகமில்லாத சமயத்தில அவரைப்பற்றி நான் பாடிய "ஆண்டவனே உன் காலடியை கண்ணீரால் நீராட்டினேன்" என்கிற பாடலைப் பாடினேன். ஜனங்களும் பாடினார்கள்.

அன்றைக்கு ஆண்டவன் நம் பிரார்த்தனையைக் கேட்டு எம்.ஜி.ஆரை நமக்குக் கொடுத்தான்.

இப்போதும் அந்தப்பாடலை ஆயிரம் முறைபாட நான் ரெடியா இருக்கேன். கடவுள் அவரை திருப்பி தந்து விட்டால் போதும்.

அவருக்கு எல்லா ராகங்களும் தெரியும். அவர் ஒரு 'ராகமாலிகா' இப்போதுகூட சமீபத்தில் அவர் கையால் பரிசு வாங்கினேன்.

அவர் நம் இதயங்களில் எல்லாம் இருக்கிறார். தமிழ் மக்கள் மனதில் என்றும் இருப்பார், அவர் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறேன்.

இலட்சிய நடிகா எஸ். எஸ். ஆர்.

புரட்சித் தலைவர், எதிர்பாராத வகையில் என்னையும், லட்சக்கணக்கான மக்களையும் தாங்கிக்கொள்ள முடியாத வேதனையிலாழ்த்தி விட்டு மறைந்து விட்டார்.

புரட்சித் தலைவர், நாட்டுக்காக, நாட்டு மக்களுக்காக, ஏழை மக்களுக்காக, நடுத்தர மக்களுக்காக, பாட்டாளித் தோழர்கட்காகத் தன்னையே அர்ப்பணித்துக் கொண்டார்.

என் அண்ணன் பொன்மனச் செம்மல் ஒரு சகாப்தம்! அந்த சகாப்தம் முடிந்து விட்டது.

என் கழகத் தோழர்களை நான் கேட்டுக் கொள்வதெல்லாம், நாம் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்பது தான். நாம் ஒற்றுமையாக இருந்து காட்டுவதுதான் அவருக்காற்றும் நன்றி-அஞ்சலி!

அமலா

என்னுடைய ஆறாவது வயது முதல் நான் சென்னையிலேயே இருக்கிறேன். இப்போது நமது அண்ணன் எம்.ஜி.ஆர், மறைந்ததைப் பார்க்கும்போது, எம்.ஜி.ஆர். இல்லாத தமிழ் நாட்டை என்னால் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியவில்லை. அந்த அளவுக்கு அவருடைய அறிவும் அனுபவமும் எங்களைப் பின்பற்றச் செய்தது,

கலை உலகிலே உள்ள தொழிலாளர்கள், தொழில் நுட்பக் கலைஞர்கள் எல்லாரும் அவருடைய இழப்பால். சோகச் சூழலில் சிக்கியிருக்கின்றோம். என்னுடைய ஆழ்ந்த கண்ணீரனுதாபத்தை தெரிவிக்கும் நிலையிலே தத்தளிக்கின்றேன்.

வலம்புரி சோமநாதன்

மக்கள் திலகம் ஒரு ஒப்பற்ற அபூர்வ தலைவர். மூன்று அல்லது நான்கு நூற்றாண்டுகளுக்கு ஒரு முறை தான் இப்படிப்பட்ட தலைவர்கள் தோன்றுகிறார்கள். அவர் சினிமா துறைக்கு செய்த சேவைக்கு, உதவிகளுக்கு ஈடு இணை கிடைக்குமா?' என்று தென்னிந்திய பட அதிபர்கள் சங்கத் தலைவர் வலம்புரி சோமநாதன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.



பாண்டியன்

புரட்சித் தலைவர் மறைவு, கலை உலகத்துக்கும் தமிழ் உலகத்துக்கும் பெரிய இழப்பு.

அவரை நடிகர் என்று சொல்வதை விட, நடிப்புக் கல்லூரி என்றே சொல்லலாம். என்னைப் போன்ற மாணவர்கள் எல்லாம் அவரிடமே பயின்றோம் என்பதிலே பெருமை கொள்கிறோம்.

புரட்சித் தலைவர் வாழ்ந்த காலத்திலே நாமும் வாழ்ந்தோம் என்ற பெருமை எனக்குண்டு.

எங்களைப் போன்ற ஆரம்ப காலக் கலைஞர்களை எல்லாம் அன்பாய், ஆதரித்து நாங்கள் மேலே உயர்ந்து சிறக்க அறிவுரைகளையும் அனுபவங்களையும் கூறுவார்.. அப்படிப்பட்டவருக்கு நான் அஞ்சலி மூலம் கண்ணீரைக் காணிக்கையாக்குவதைத் தவிர வேறு கதியில்லை.

ரேகா

மறைந்த புரட்சி அண்ணன் அவர்களுடன் நடிக்க எல்லா நடிகைகளும் ஆசைப்படுவாங்க நான் அப்படி நினைக்கலே. அவர் கையாலே ஒரு பரிசு வாங்கனும்னுதான் ஆசைப் பட்டே.

நான் ராமாவரம் தோட்டத்திலே அவரைப் பார்க்கலாம்னு போனே.

என்னை யாரும் உள்ளே விடலே. பிறகு அவரை எப்படியோ பாத்துட்டே. அவர் கையிலே பரிசு வாங்கணும்ற என் ஆசையைச் சொல்லி கண்ணீர் விட்டே.

கைக் குட்டையாலே அவரே, என் கண்களிலே இருந்து வழிந்த கண்ணீரைத் தொடச்சாரு.

நீ ஒரு நடிகையா இருந்துகிட்டு, ஏன் இதுவரை என்னைப்பார்க்கவே வரலே என்றுகேட்டாரு.

நான் வந்தபோது என்னே பார்க்க அனுமதிக்கலே என்றேன்.

இனி மேலே இது உன் வீடு. நீ எப்போ வேண்டுமானாலும் வரலாம்—போகலாம் என்றார்.

அடுத்த மாதம் வரலாமான்னு கேட்டேன்! 'வா' என்றார்.

என்ன மாதிரி சினிமா ஆர்ட்டிஸ்டுகளுக்கெல்லாம் அவர் ஒரு பெரிய தகப்பனார் மாதிரி இருந்தாரு. அவர் இப்போ மறைந்து விட்டார்! எங்களுக்கெல்லாம் துக்கமாக இருக்கு!

தமிழ்நாடே துக்கப்படுது!

டைரக்டர் முத்துராமன்

நடிகர்களைக் கூத்தாடிகள் என்றதை மாற்றி உலகுக்கே வழிகாட்டியாகத் திகழ்ந்த பெருமை படைத்தவர் எம்.ஜி.ஆர். மக்களுக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர்.

குன்னக்குடி வைத்திய நாதன்

புரட்சித் தலைவர் மரணச் செய்தி கேட்டு சோகமே உருவாகி நிலைகுலைந்து காணப்பட்டவர் குன்னக்குடி வைத்தியநாதன். அவர் அஞ்சலி செலுத்திய போது, "நாடே சோகமாகக் கிடக்கிறது. தாயை இழந்த சேய் போலத் தவிக்கிறேன். காலத்தின் கோலம் நம்மிடமிருந்து அவரைப் பிரித்து விட்டது. இந்த சோதனையை எப்படித் தாங்கிக் கொள்ளப் போகிறோமோ" என்றார்.

ஜி. வி.

புரட்சித் தலைவர் கலியுகக் கர்ணன்! கோடான கோடி மக்களின் இதய தெய்வம் புரட்சித் தலைவர்!

பொன்மனச் செம்மல் எதிர்பாரா திடீர் மறைவு கேள்வியுற்று வேதனையடைந்தேன்.

கடல் கடந்து சென்றிருப்பினும் எனது கண்ணீர் கரை கடந்து வந்து தங்கள் கல்லறையை நாடும்! காலமெல்லாம் தங்கள் புகழ் பாடும்! என்று தென்னிந்திய திரைப் பட வர்த்தக சபை தலைவர் ஜி. வெங்கடேஸ்வரன் குறிப்பிட்டார்.



இளையராஜா புகழ்மாலை

தர்மத்தின் தலைவராக புரட்சித் தலைவர் வாழ்ந்தார். அந்த வழியிலே நடக்க வேண்டியது நமது கடமை.

உலகம் தோன்றிய காலத்திலிருந்து இன்று வரை மனித குல வரலாற்றிலே எந்த ஒரு மனிதருக்கும் இல்லாத மாபெரும் சிறப்பு நமது புரட்சித் தலைவருக்கு உண்டு. இவரது அற்புத வரலாறு! எந்த ஒரு தலைவரின் வாழ்க்கையிலும்



1988

JANUARY

S	31	3	10	17	24
M		4	11	18	25
T		5	12	19	26
W		6	13	20	27
T		7	14	21	28
F	1	8	15	22	29
S	2	9	16	23	30

FEBRUARY

S		7	14	21	28
M	1	8	15	22	29
T	2	9	16	23	
W	3	10	17	24	
T	4	11	18	25	
F	5	12	19	26	
S	6	13	20	27	

MARCH

S		6	13	20	27
M		7	14	21	28
T	1	8	15	22	29
W	2	9	16	23	30
T	3	10	17	24	31
F	4	11	18	25	
S	5	12	19	26	

APRIL

S		3	10	17	24
M		4	11	18	25
T		5	12	19	26
W		6	13	20	27
T		7	14	21	28
F	1	8	15	22	29
S	2	9	16	23	30

MAY

S	1	8	15	22	29
M	2	9	16	23	30
T	3	10	17	24	31
W	4	11	18	25	
T	5	12	19	26	
F	6	13	20	27	
S	7	14	21	28	

JUNE

S		5	12	19	26
M		6	13	20	27
T		7	14	21	28
W	1	8	15	22	29
T	2	9	16	23	30
F	3	10	17	24	
S	4	11	18	25	

JULY

S	31	3	10	17	24
M		4	11	18	25
T		5	12	19	26
W		6	13	20	27
T		7	14	21	28
F	1	8	15	22	29
S	2	9	16	23	30

AUGUST

S		7	14	21	28
M	1	8	15	22	29
T	2	9	16	23	30
W	3	10	17	24	31
T	4	11	18	25	
F	5	12	19	26	
S	6	13	20	27	

SEPTEMBER

S		4	11	18	25
M		5	12	19	26
T		6	13	20	27
W		7	14	21	28
T	1	8	15	22	29
F	2	9	16	23	30
S	3	10	17	24	

OCTOBER

S	30	2	9	16	23
M	31	3	10	17	24
T		4	11	18	25
W		5	12	19	26
T		6	13	20	27
F		7	14	21	28
S	1	8	15	22	29

NOVEMBER

S		6	13	20	27
M		7	14	21	28
T	1	8	15	22	29
W	2	9	16	23	30
T	3	10	17	24	
F	4	11	18	25	
S	5	12	19	26	

DECEMBER

S		4	11	18	25
M		5	12	19	26
T		6	13	20	27
W		7	14	21	28
T	1	8	15	22	29
F	2	9	16	23	30
S	3	10	17	24	31